விலை ரூபா 2-00

12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 28 பங்குனி 3 றஜப் 4 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (16—3—86) இதழ் 34

## அதிகாலைத் தாக்குதலில் 6 கடற்படையினர் பலி!

[சென்னை]

நேற்று அதிகாலை மூன்று மணியளவில் காரை நகர் கடற்படைத்தளத்துக்கும் கடல்கோட்டைக்கும் இடையில் தம்மால் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலால் ஆறு கடற்படையினர் கொல்லப்பட்டதுடன் அவர் ளது ரோந்துப் படகும் நிர்மூலமாக்கப் (11ம் பக்கம் பார்க்க)

## ★ லண்டன் இந்திய தூதரகம் முன் சிங்களவர் ஆர்ப்பாட்டம்!

## ★ மொன்றீல் இலங்கை தமிழருக்காக கனடாபிரஜைகள் ஊர்வலம்

## ★ சுவிஸ் தூதரகம் முன்னால் தமிழர் ஆர்ப்பாட்டம்!

(லண்டன்)

லண்டனிலுள்ள இந்திய தூதரகத்துக்கு முன்னால் அங்குள்ள சிங்களமக்கள் ஆர்ப்பாட்டமொன்றினை நடத்தியுள்ளனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியத் தலையீட்டினை நிறுத்தக்கோரியும், இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகளை வெளியேற்றக் கோரியுமே மேற்படி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது என அறிவிக்கப்படுகின்றது.

இந்த வேளையில் லண்டனிலுள்ள சுவிஸ் தூதரகத்தின் முன்னால் தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டஞ் செய்துள்ளனர்.

சுவிஸில் அரசியல் புகலிடம் கோரி அங்கு சென்றுள்ள தமிழர்களை நாட்டைவிட்டு வெளியேற்றும் வகையில் எதுவித தீர்மானத்தையும் மேற்கொள்ள வேண்டாம் எனக் கோரியே தமிழர்கள் மேற்படி ஆர்ப்பாட்டத்தை நடத்தினராம்.

இலங்கையில் தமிழ் பேசும் மககளின் மனித உரிமைகள் [11ம் பக்கம் பார்க்க]

## நேற்றிரவு கோட்டைப் பக்கமிருந்து வந்து விழுந்த குண்டுகள்!

[யாழ்ப்பாணம்]

யாழ் பஸ் நிலையப்பக்கமாக நேற்றிரவு 10 மணியளவில் அடுத்தடுத்து மூன்றுகுண்டுகள் விழுந்துவெடித்தன. யாழ் கோட்டைட் பக்கத்திலிருந்து ஏவிவிடப்பட்ட குண்டுகள் அவை என்று தெரிவிக்கப்படுகிறது. (மா)

### ● தகர்க்கப்பட்ட பாதையில்

# தடம்புரண்ட யாழ்தேவி!

# ஐவர்பலி! அநேகர்காயம்!

## தியாகிகள் மாநாடு கண்டனத் தீர்மானம்!

(சென்னை)

சுதந்திர போராட்ட தியாகிகள் மாநாடு, இலங்கையில் தமிழர் மீதான இனப்படுகொலையைக் கண்டித்துத் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது;

சென்னையில் நேற்று முடிவடைந்த இவ்வியக்கத்தின் இரண்டு நாள் மாநாட்டிலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## பரந்தனில் நடந்த பரிதாப ரயில் விபத்து

(ஏ. வி. மாணிக்கம்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட யாழ்தேவி ரயில் விபத்துக்குள்ளானதால் பிரயாணிகள் அதிகமாக இருந்த மூன்று பெட்டிகள் தண்டவாளத்திலிருந்து தடம்புரண்டு பலத்த சேதமடைந்துள்ளன. அதனைத்தொடர்ந்திருந்த இரு பெட்டிகளும் சிறுசேதங்களுக்குள்ளாகியுள்ளன.

பிரயாணிகளில் ஐந்து பேர் பலியானார்கள்; பலர் காயமடைந்துள்ளனர்.

(12ம் பக்கம் பார்க்க)

## காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்தவர்கள் விபரம்:

(யாழ்ப்பாணம்)

விபத்தில் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்கள் விபரம் வருமாறு:

மு. சர்வநடராசசிங்கம் (56 வயது) இளைப்பாறிய றெயில்வே ஊழியர், கிளிநொச்சி; அ சிறீநிவாசன் (60-வயது) யாழ். பெருமாள் கோவிலடி; வே. புஷ்பநாதன், (23 வயது) கொடிகாமம்; ஏ. குமரசாமி [48 வயது] கோப்பாய் பழம் வீதி; எஸ் நடராசா, யாழ்ப்பாணம்; எஸ். விஜயலட்சுமி, நயினாதீவு; உருத்திரநாயகி,

[12 ம் பக்கம் பார்க்க]

## 'வடக்கு வரும் படை வீரர்களை பலாத்காரமாகவே அனுப்புகிறோம்!'

### கிளிநொச்சியில் அமைச்சர் 'ரணில்'

(கிளிநொச்சி)

"வடக்கில் கடைமையில் ஈடுபட இராணுவ வீரர்கள் விரும்பவில்லை நாம் பலாத்காரமாகவே அவர்களை இங்கு அனுப்புகிறோம்"

கிளிநொச்சிக்கு ஹெலிக்காப்டர் மூலம் விஜயம் செய்த கல்வி, இளைஞர் வேலைவாய்ப்பு அமைச்சர் திரு ரணில் விக்கிரமசிங்ஹ பாடசாலை அதிபர்கள் மத்தியில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

(21-ம் பக்கம் பார்க்க)

### திரியாயில்

## 9 இராணுவத்தினர் பலி!

### உரிமைகோரும் 'புலிகள்'

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள திரியாய் என்னும் பகுதியில் தமது இயக்கப் போராளிகளால் இராணுவத்தினர் மீது மேற்கொண்ட தாக்குதலில் 9 இராணுவத்தினர் பலியானதாகவும் பலர் படுகாயமடைந்ததாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுளளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

"கல்லிறவு முகாமிலிருந்து திரியாயிற்கு நேற்று முன்

[12ம் பக்கம் பார்க்க]

தரமான தமிழ் ஆங்கில வீடியோ படப்பிரதிகளை உடனுக்குடன் வழங்கி வரும்

பருத்தித்துறை

கைலாஸ் ஸ்தாபனத்தாரின்

மற்றுமோர் சிறப்பான சேவை

வீடியோ படப்பிடிப்பு

உங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண, பிறந்த நாள் மற்றும் விஷேச நிகழ்ச்சிகள் அனைத்தையும் சிறந்த முறையில் புத்தம் புதிய வீடியோ கமராமூலம் மிகவும் குறைந்த செலவில் படம்பிடித்துக் கொள்வதற்கு நாடுங்கள்.

[பிறந்த நாள் வைபவங்கள் மிக [மிகக் குறைந்த சலாரில் செய்து கொடுக்கப்படும்] [A 1261]

## 'பத்திரிகை அறிக்கை மூலம் யுத்தநிறுத்த ஒப்பந்தமா?

[சென்னை]

"இலங்கை அரசாங்கத்தின் இராணுவ முகாம்களில் ஒரு கலவரநிலை தென்படுகிறது. ஆயுதப்படையினர் போரிட்டுக் களைத்துவிட்டனர் இந்நிலையில் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. அத்துலத்முதலியினால் வேறு என்ன செய்யமுடியும்"

(11ம் பக்கம் பார்க்க)

## 'இந்த நிலையில் இலங்கைக்கு உதவுவது எப்படி?'

### நிதி அமைச்சர்கள் மாநாட்டில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கேள்வி

(கொழும்பு)

"இலங்கை நிலைமையைப் பற்றி கவலைதரும் செய்திகள் வந்தவண்ணம்உள்ளன. இந்த நிலைமையில் இலங்கை அரசிற்கு எவ்வாறு உதவிவழங்க முடியும்" என்று புவனர்ஸ் அயர்ஸில் நடைபெற்ற நிதியமைச்சர்கள் மாநாட்டில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கேள்வியெழுப்பியதாக நிதியமைச்சர் திரு. றொனி டிமெல் தெரிவித்தார்.

கடந்த வாரம் நடைபெற்ற நிதிஅமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு நாடு திரும்பிய அமைச்சர், பத்திரி

[11ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ICMA படிக்கிற Packs பகுதி-1. ஆங்கில நாவல் புத்தகங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 56, 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
C-1259

பின்வருவன விற்பனைக்குள்ளன:- Crown Cassette/Radio, Akai Tuner, Washing Machine, கவர்ச்சியான புதிய கதிரைகள், மேசைகள், T. V. Stands: Dyn Ads, 476 பிரதான வீதி, சுண்டுக்குளி (சென்ற் ஜோன்ஸ் கல்லூரி முன்பாக).
A-376

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காயவிதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
C-1220

3½ பரப்புக்காணியில், கண்ணகை அம்மன் வீதி, அப்பிளானை, கோப்பாய் வடக்கு விலாசத்தில் அமைந்துள்ள எல்லா வசதிகளையும் (கராஜ் உட்பட) கொண்ட வீடு ஒன்று விற்பனைக்குண்டு. விளம்பர இலக்கம்: C-1245 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.
C-1245

கோண்டாவில்இருபாலைவீதியில் மின்தறி ஆலைக்கு முன்னால் உள்ள தோட்டக்காணியில் இருபதுபரப்பு விற்பனைக்குண்டு. பகுதி பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். தொடர்பு: திருமதி சிவசுப்பிரமணியம் 'ஜீவனி' நந்தாவில், கொக்குவில் கிழக்கு.
C-1251

நல்ல இன வளர்ப்பு மீன்கள் விற்பனைக்குண்டு. ''ரத்தினவாசா'' கருவேலடி லேன், (பழைய புகையிரத வீதி) கொக்குவில் கிழக்கு.
C-1253

எலக்ரோனிக் மியூசிக்கல் ஓர்கன் விற்பனைக்குண்டு. 12 விதமான கருவி இசைகள் [பியானோ; வயலின்; கிற்றார்; கிளாரினெட் உட்பட] 12 விதமான Rhuthms கொண்டது. இரு Box: Rompack A/c Adaptor என்பனவற்றுடன் உள்ளது. Casiotone - Mt800 - Japan மிகவும் புதிய கருவி தொடர்பு: மாணிக்க இராசகிரி, கோண்டாவில் மேற்கு
C 1203

நல்ல நிலையில் உள்ள 26 சிறி அசோக் லேலண்ட் லொறி ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டியமுகவரி: சாகிட்றேட் சென்டர், 148, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
[C1211]

புரொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு தொடர்பு: சிமாட்டி பான்சி குட்ஸ், 158, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
[C 1144]

வீட்டுத்தளபாடங்கள், கட்டில்கள்,மேசைகள், ஹோல் செற்றி, T.V Stand, Washing machine, Kenwood Chef, A50 கார், National RX 47 கசற் றேடியோ, Showcase, பழுதடைந்த Type Writers, Adding Machine, பெரிய சாப்பாட்டு மேசைகள், Dressing Table, கிளாஸ் வகைகள், பித்தளை பெரிய குத்துவிளக்குகள் மற்றும்பல. பத்மநாதன், ஆடியபாதம் றோட், திருநெல்வேலிவடக்கு, மருத்துவக் கல்லூரிக்கும் திருநெல்வேலிச் சந்திக்குமிடையில்.
[C1217]

## விற்பனைக்கு

அக்ஷய வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் விற்பனையாகிறது. விலை ரூபா 16/- கிடைக்குமிடம்: சோதிடவிலாச புத்தகசாலை, 46, பெரியகடை, யாழ்ப்பாணம், வியாபாரிகளுக்கு விசேஷ கழிவுண்டு.
(C 1208)

நல்ல நிலையில் இயங்கும் National T. V. கலர் 20 அங்குலம் விற்பனைக்குண்டு. இல. 432 (222), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[C1212]

அல்சேசன் 1 மாத நல்லின குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு. லிங்கநாதன்,7, ஐயனார் கோவிலடி, வண்ணார் பண்ணை.
[C 1231]

300 அடி நீளமான, 2'' விட்டமுள்ள அக்கத்தின் பைப் [சிறிதளவு காலம் பாவித்தது] அத்துடன் வயரிங்செய்ய உகந்த ½'' விட்டமான P V C குழாய்கள் 23 விற்பனைக்குண்டு C. T. அன்ரனிராஜா, அமிலவனம், சில்வா வீதி, வட்டுக்கச்சி or dyn ads. 476, பிரதான வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(A 371)

## தேவை

வேலைக்கு ஆட்கள் உடன் தேவை. ரெடிமேட் மேக்கர், கோக்கி, சப்ளையர், நஷனல் ஹோட்டல் மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடி, கரவெட்டி.
C 1195

அச்சுக்கூடத்தில் (Press) வேலை செய்யக்கூடிய பெண்கள் தேவை. ரோதிய தகமை சான்றிதழ்களுடன் தொடர்புகொள்ளவும். தபால்/நேரில்:11 சினியர் ஒழுங்கை, கலட்டி, யாழ்ப்பாணம்.
(C1193)

எந்நகரத்திலும் Sports Cycle உடனடியாகத் தேவை. தொடர்பு: மு. ஜெயராசசிங்கம், 150, மானிப்பாய் வீதி, உடுவில். [உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன்னால்]
C-1223

வீட்டுப் பணிப்பெண்கள் தேவை சிங்கப்பூருக்கு செல்வதற்கு. பாதுகாவல் உத்தியோகஸ்தர் யாழ்ப்பாணத்தில் வேலை செய்வதற்கு. நேரில் சந்திக்கவும். தொடர்பு: T. குணரட்ணம், சீநோர் பங்களா, திருஞானசம்பந்தர் வீதி, வட்டுக்கோட்டை.
C-1226

பெண் காரியதரிசி, வயது 24-38கல்வித்தகைமைG.C.E. அல்லது S. S. C. இந்தியாவில் வேலைசெய்ய விரும்புவராக இருக்கவேண்டும் 21-03-86க்கு முன்பு விண்ணப்பிக்கவும். ஹரி ஹரன் என்ரபிறைஸ், 337, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
C-1256

உள்ளூரில் உற்பத்தியாகும் பாவனைப்பொருள்களை வீட்டுக்கு வீடு சென்று விற்பனை செய்வதற்கு 18 வயதுக்குட்பட்ட ஆண்கள் தேவை யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவராகவும், பிரமுகர் ஒருவரினால் நற்சாட்சிப்படுத்தப்படக் கூடியவராகவுமிருத்தல் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல.1216 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.
[C1216]

## கல்வி

G.C.E. (O/L)இல் கட்டாய பாடமாகிய கணிதம் 17வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்கு நுணுக்கமான முறையில் வீடுகளிற் சென்று கற்பிக்கப்படும். மற்றும் (O/L) (A/L சகல பாடங்களும் பட்டதாரி ஆசிரியர்களினால, கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி அல்லது 252, ரூபன் ஸ்ரோர்ஸ், நாவலர் றோட்.
C-1242

## மணப்பந்தல்

இந்து வேளாள இனத்தைச் சேர்ந்த ஆசிரிய (Dip-in-English) தொழில் புரியும் மணப்பெண்ணுக்கு 34 வயதுக்கு மேற்பட்ட மணமகன் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1247, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.
(C 1247)

யாழ்ப்பாணம் இந்து உயர் வேளாளகுல, அரசாங்க திணைக்களத்தில் கடமைபுரியும் 36 வயதுள்ள மணமகனுக்கு மணப்பெண் தேவை. 33 வயதுக்குட்பட்ட பட்டதாரி மணமகள் விரும்பத்தக்கது. விவசாய அல்லது மிருகவைத்திய பட்டதாரிக்கு முன்னுரிமை அளிக்கப்படும். சீதன விபரம், குடும்ப விபரம், மணமகளின் சாதகம் போன்ற முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. C-1139, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.
C-1139

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



S. வடிவேலு

தாயின் மடியில்:
10-1-1931
தாழ்அடையாள் அடியில்
27-3-1985

எம் இதயக்கோயிலிலே
சுடர் வீசும்
ஒளிவிளக்கே!

நீங்கள் அனைத்து ஆண்டொன்றுகிவிட்டது. காலச்சோட்டம் கருகி மறைந்தாலும் எம் இதயங்களிலே ஏற்றி வைத்த அன்பென்னும் சுடர் என்றும் ஒழி வீசியவாறே இருக்கும். ஊனக்கலந்து உயிர் கலந்து ஒன்றிவிட்ட உத்தமரே எம் சண்ணீர் மலர்களை உதிர்த்துக் காணிக்கையாக்குகிறோம்.

அன்புத்துணை,
அருமைப்பிள்ளைகள்,
உறவினர்,
நண்பர்கள்,

மாவை,
கலட்டி.
(C1258)

ஊர்காவற்றுறை

பல. நோ. கூ. சங்கம்

## கேள்விப்பத்திரம்

மூவாயிரத்து ஐந்நூறு (3500) வெற்றுச்சாக்குகளுக்கு கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. ரூ. 2.50 செலுத்தி சங்கத்தில் பெற்றுக்கொண்ட பத்திரத்தில் ''பொது முகாமையாளர், ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை'' என்னும் விலாசத்திற்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ கேள்விப்பத்திரங்களை 20-3-86ந் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

கேள்விப்பத்திரங்கள் 19-3-86ந் திகதிவரை (பகல் 12.00 மணிவரை) விநியோகிக்கப்படும். விண்ணப்பதாரர் ரூ 750/- வைப்புப்பணம் செலுத்தி இருத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,

ஊர்காவற்றுறை,
14-3-86.
(A 375)

## முக்கிய அறிவித்தல்

### யாழ்ப்பாணம மாநகராட்சி மன்றம் சோலைவரி 1-ம் கந்தரயம் 1986

1986-ம் ஆண்டு 1-ம் கந்தாயத்திற்கான சோலைவரிப்பணம் 31-3-86ந்திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக மாநகராட்சி மன்றப் பணியகத்தில் செலுத்தப்படல் வேண்டும். இத் திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப் பணத்திற்கு மேலதிகமாக கீழ் வரும் விபரங்களின்படி வெளியாத்துப் பணம் அறவிடப்படும்.

| | |
|---|---|
| வெற்றுக் காணிகள், குடியிருப்பு காணிகள் | — 15% |
| இவையல்லாத காணிகள் | — 20% |

காசோலைகள், காசுக்கட்டளைகள், அஞ்சற் கட்டளைகள் ''யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரின்'' சார்பில் அஞ்சல் சேவையில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு முன்கூட்டியே அனுப்பப்படல் வேண்டும். இப்படியாக அனுப்பப்படும் போது வரியிறுப்பாளர்கள் ஆதனத்தின் தற்போதைய வரிமதிப்பு இலக்கம். வீதியின் பெயர், வட்டாரத்தின் இலக்கம் முதலிய விபரங்களுடன் வரிப்பணத்தை அனுப்பும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

சீ. வி. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
13-3-86.
A 366

## பரதம் பாரம்பரிய கலை

[யாழ்ப்பாணம்]

''பரதக்கலை மிகவும் பாரம்பரியக்கலையாகும். அதன் நுணுக்கங்களை ஒழுங்காகக் கற்று அபிநயம் பிடித்து ஆடுவதிலேயே அதன் சிறப்பு தங்கியுள்ளது'' என்று யாழ்பல் கலைக்கழக விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராஜா கொக்குவில் கலைக்கோவில் அமரகலா நாட்டியாலயத்தின் பத்தாவது ஆண்டுப் பூர்த்திவிழாவில் பிரதமவிருந்தினராக கலந்து உரையாற்றுகையில் கூறினர்.

அண்மையில் இவ்விழா கொக்குவில் நாமகள் வித்தியாசாலையில், வித்தியாசய அதிபர் ஐ. சரவணபவன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

டாக்டர் எஸ். பவானி, திரு ஆர். ரீ. சுப்பிரமணியம் ஆகியோரும் விழாவில் கலந்து உரையாற்றினர்கள் இதைத்

(11ம் பக்கம் பார்க்க)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி
ச. கமலாம்பிகை

மலர்வு: 31-8-37
உதிர்வு: 15-2-86

15-2-86 சிவபதம் எய்திய எமது அன்புத் தெய்வம் திருமதி கமலாம்பிகை சங்கரநாதன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியை நாளை 17-3-86 திங்கட்கிழமை நடைபெறும். அத்தருணம் தாங்கள் சமூகமளித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எங்களுடன் சேர்ந்து பிரார்த்திக்கு மாறு தழ்மையுடன் வேண்டுகிறோம்

கணவன், பிள்ளை,
மருமகன், சகோதரர்,
சகோதரிகள்,
மைத்துனர்கள்,
பேரப்பிள்ளை,
மருமக்கள்.
''அம்பிகை இல்லம்''
தெல்லிப்பழை கிழக்கு.
தெல்லிப்பழை (C 1250)

## பதவி வெற்றிடங்கள்

யாழ். நகரில் ஆரம்பிக்கவிருக்கும் நிறுவனத்திற்கு படித்த ஆண் பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. துணியில் பூவேலை செய்பவர்கள்
2. கைப்பணி வேலை செய்பவர்கள்
3. வரைபடம் வரைபவர்கள்
4. பனம் நார் வாரக்கூடியவர்கள்
5. தகர ஒட்டுவேலை தெரிந்தவர்கள்

மேல் குறிப்பிடும் பதவிகளுக்கு அனுபவம் உள்ளவர்கள் மட்டும் கீழே குறிப்பிடும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. C 1187, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.
C 1187

# இலங்கைப் பிரச்னை: புதிய அணுகுமுறையை இந்தியா மேற்கொள்ள வேண்டும்

## ஒன்பது எதிர்க்கட்சிகள் வற்புறுத்து

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்னை உலகம் தழுவிய கவனத்தையும், கவலையையும் ஈர்த்துவிட்டது என்றும் ஆகவே இந்திய அரசு இந்தப் பிரச்னையைத் தீர்க்க புதிய அணுகுமுறையொன்றை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஒன்பது எதிர்க்கட்சிகள் இந்திய அரசை வற்புறுத்தியுள்ளன.

இக்கட்சிகள் நேற்று முன் தினம் கூட்டாக வடுத்துள்ள அறிக்கையொன்றில் இலங்கை இனப்பிரச்னையை அங்குள்ள தமிழ்மக்கள் மட்டும் சம்பந்தப்பட்ட உள்நாட்டு விவகாரம் என்று கருதுவது மிகப்பெரிய தவறு என்றும், மாறுக இந்தப்பிரச்னை விசுவரூபம்எடுத்து மக்களின் உரிமைகளையும், ஆசியா உட்பட உலகத்தின் அமைதியையும் பயமுறுத்தும் சர்வதேச அளவுகளை எட்டி விட்டது என்றும் இந்தக் கட்சிகள் தெரிவித்துள்ளன

கடந்த அக்டோபர் மாதம் மாறு வடத்தில் இலங்கை சென்று திரும்பியுள்ள தமிழ் நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. நெடுமாறன் பேசிய செய்தியாளர்கள் கூட்டத்தில் இந்த எதிர்க்கட்சிகளின் கூட்டறிக்கைவெளியிடப்பட்டது.

ஜனதா, பாரதீய ஜனதா, காங்கிரஸ் எஸ், லோக்தள், து. மு. க., இந்தியன் யூனியன், முஸ்லீம் லீக், தெலுங்கு தேசம், தேசிய மாநாடு ஆகிய கட்சிகளின பிரதிநிதிகள் இந்தக் கூட்டறிக்கையில் கையெழுத்திட்டுள்ளன.

இலங்கையரசுக்கு இராணுவ மற்றும் ஏனைய உதவிகளை அளிப்பதை உலக நாடுகள் நிறுத்தும் வண்ணம் பாரதம் தூதரக முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்றும் இந்தக் கட்சிகள் இந்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளன. [து]

உலகச் செய்திகள்

## விமானத்தாக்குதல் நிறுத்தம் உலகை ஏமாற்றும் செயல்

(சென்னை)

''இலங்கையின் தமிழ்ப்பகுதிகளில் விமானத் தாக்குதல்கள் நிறுத்தப்படும் என்று இலங்கை அரசு அறிவித்திருப்பது உலகை ஏமாற்றுவதற்கும் மேலும் பலமான தாக்குதலுக்கு இராணுவத்தை தயார் படுததுவதற்குமான முயற்சியாகும்'' என்று 'இனப்படுகொலைகளிலிருந்து ஈழத் தமிழர்களை பாதுகாப்பதற்கான அமைப்'பான 'புரோட்டஸ்' தெரிவித்துள்ளது.

''இனப்பிரச்னைக்கு இராணுவத்தீர்வு காணபதற்கான முயற்சிகளைக் கைவிட்டுவிட்டதாக இலங்கை அரசு நிரூபிக்கும் வரை அந்த அரசின் இந்த நோக்கங்களுக்கு உதவும் எந்த நடவடிக்கைகளையும் எடுத்து விட வேண்டா'' மென்று, புரோட்டஸ் இந்திய அரசைக் கேட்டுள்ளது.

''இலங்கைத்துருப்புகளும் மற்றும் ஆயுதப்படைகளும் தமிழ்ப்பகுதிகளிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட வேண்டும். அல்லது அப்பகுதிகளில் இந்திய சமாதானப்படை நிறுத்தப்பட வேண்டும். இல்லாவிடில் இந்த தற்காலிக போர் நிறுத்தம் அர்த்தமற்றவையே'' என்று புரோட்டஸ் மேலும் தெரிவித்துள்ளது.

''நெருக்கடி நிலை நீக்கப்பட வேண்டும். பயங்கர வாதச் சட்டம் வாபஸ் பெற வேண்டும். சகல அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும்'' என்றும் புரோட்டஸ் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## இன்று கொடியேற்றம்

[யாழ்ப்பாணம]

புங்குடுதீவு கிழக்கு கலட்டி வரசித்தி வநாயகர் ஆலய உற்சவம் இன்று ஞாயிறு நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது ரதோற்சவம் இம்மாதம் 24ம் திகதி திங்கள் நடைபெறும்.

## நாச்சிமார் கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்-வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் (நாச்சிமார் கோவிலில்) இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 40 தினங்கள் பூசை நடைபெற்று அடுத்த மாதம் சித்திரை] 24-ம் திகதி மகா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (மா)

## சுவிஸ் விஜயத்தின்போது ஹமீத்துக்குக் கடும் எதிர்ப்பு

[பேர்ன்]

சுவிஸ்ஸர்லாந்துக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கடந்த மூன்றுந் திகதி வந்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜனப் ஏ. சி. எஸ். ஹமீதுக்கு; எதிர்ப்பு தெரிவிக்கும்முகமாக தமிழீழ மாணவர் பேரவை, சுவிஸ் சமஷ்டிப் பாராளுமன்றத்தின்முன் மாபெரும் ஊர்வலத்தை நடத்தி தமது கடுமையான எதிர்ப்பை வெளிக்காட்டியது.

அச்சமயம் 39 தமிழ் இளைஞர்கள் சுவிஸ் பொலிஸாரினுல் கைதுசெய்யப்பட்டு, ஐந்து மணிநேர தடுப்புக்காவலின் பின்னர் விடுதலைசெய்யப்பட்டார்கள்.

இவ்விஜயத்தின்போது ஜனப் ஹமீது சுவிஸ் அரசின நீதித்துறை அமைச்சரான திருமதி எலிசபெத் கொப்பையும், அகதிகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளையும் சந்தித்துப் பேசினர். (பி)

## கராச்சிக் கரைக்கருகே யு. எஸ். போர்க் கப்பல்கள்

[இஸ்லாமாபாத்]

ஆறு அமெரிக்க போர்க் கப்பல்களின் அணியொன்று 'அமெரிக்க என்ரை பிறைஸ்' தலைமையில் கராச்சி துறைமுகததிற்கு அப்பால் நங்கூரமிட்டுள்ளதாக தெரியவருகிறது.

இந்தப் போர்க்கப்பல்கள் அணியில் இரண்டு ஏவுகணைக் கப்பல்களும் இரண்டு நாசகாரிகளும் அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிகப்பல்ஒன்றும இருக்கிறது.

இந்தக்கப்பலில் வந்த சுமார் நாலாயிரத்து ஐநூறு அமெரிக்க மாலுமிகள் கராச்சியில் ஓய்வெடுததுக்கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு தொகையில் அமெரிக்க மாலுமிகள் கராச்சியில் இருப்பது இதுவே முதல்தடவையாகும். முன்பெல்லாம் அமெரிக்க கப்பல்களுக்கு பாகிஸ்தான் துறைமுகங்களில் நிறுத்தும் வசதி மட்டுமே வழங்கப்பட்டுவந்தது.

அமெரிக்க ஏழாவது கடற்படை அணியில இடம்பெற்றிருக்கும் இந்த போர்க்கப்பல்கள் வருவதற்கு அனுமதித்த பாகிஸ்தான் அரசின் முடிவை ஜனநாயக மீட்பு இயக்கத்தின் தலைவர் திரு. இக்பால் கைதர் குறைகூறியுள்ளார்.

நாட்டின் மண்டலசார்பற்ற கொள்கையை இச்செயல் மீறுமதாகஉள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். [து]


யானை மார்க்
ஒவ்வொரு போத்தலிலும் மேலதிகமாகக் கிடைக்கிறது




CCS சிலோன் கோல்ட் ஸ்ரோஸ் லிமிட்டெட் ரூ:2/10 முதல்
Ribbs N&L

# கிழக்கில் தொடரும் ஒரு தலை

# யுத்தம்!

**['இந்தியா ருடே' சஞ்சிகையின் மார்ச் 15-ம் திகதி இதழில் தவ்லீன் சிங் என்பவரால் எழுதப்பட்டுள்ள கட்டுரை இது.]**

"எனக்கு 43 வருட கால அரசியல் அநுபவம் உண்டு. திரு. ராஜீவ் காந்திக்கு இன்னும் 43 வயது ஆகவில்லை" என்று ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தன கூறுவதாக பரவலாகக் கொழும்பில் ஒரு நகைச்சுவைக் கருத்து உலாவுகிறது

இதன் உண்மை எப்படியிருந்தாலும் அதன் பயங்கரத் தன்மை தற்பொழுது தலை தூக்கிவருகிறது.

இந்திய அரசு இலங்கையின் இனப்பிரச்னைக்குஅமைதியான அரசியல் தீர்வொன்றைக் காணுவதற்கு தொடர்ந்து முயற்சித்து வரும்வேளையிலும் இலங்கை அரசின்பாதுகாப்புப் படைகள் ஏற்கனவே கிழக்கிலங்கையில் இராணுவத் தீர்வொன்றை நிலைநாட்டும் முயற்சியில் அரைவாசித்தூரம் முன்னேறிவிட்டதாகக் கருதப்படுகிறது. இதன்விளைவாக நூற்றுக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் பலியாகியுள்ளதுடன் அதே அளவில் மக்கள் காணாமலும் போயுள்ளனர்.

தமிழ்த் தீவிரவாதிகளுக்கு எதிராக கிழக்கு மாகாணத்தில் கடந்த நவம்பர் மாதத்தில் ஜனாதிபதியின் இரகசிய யுத்தம் ஆரம்பமாயிற்று இதன் ஒரேயொருவித்தியாசம் யாதெனில் இந்த யுத்தத்தில் 14 வயதிற்கும் 40வயதிற்கும் இடைப்பட்டோரே குறிவைக்கப்பட்டனர்.

இந்தப் புதிய தாக்குதலின் அடையாளங்களை மட்டக்களப்பு நகரில் பல பாகங்களிலும் காணலாம். இது பெரும்பாலும் ஒருபக்கச் சார்பான தாக்குதலே.

அவசரகால நிலைமையின் கீழ் மட்டக்களப்பு விமானத்தளத்தைச் சூழவுள்ள பகுதிகளெல்லாம் இரவோடு இரவாக அடித்து நொறுக்கப்பட்டு, அதன் உரிமையாளர்கள் நிர்க்கதியாக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு ஒரு சிறிய தொகை சுமார் 2000 ரூபா வரையில் நஷ்டஈடு வழங்கப்பட்டபோதிலும், சில வீடுகள் பல ஆயிரம் ரூபா பெறுமதியானவை என்பது குறிப்பிடத்தக்கது.

நகரிலுள்ள வீட்டு மதில்கள் எல்லாம் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. தீவிரவாதிகள் மறைந்திருந்து தாக்கக்கூடும் என்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

அதேநேரத்தில் இராணுவப் படைகள் காட்டுமிராண்டித்தனமான இரு முனைத் தாக்குதலை ஆரம்பித்துள்ளனர். தமிழ்த் தீவிரவாதிகள் எதிர் நடவடிக்கை ஏதாவதொன்றில் இறங்கும் பட்சத்தில் உடனடியாகவே அரச இராணுவத்தினர் அப்பகுதியைச் சுற்றிவளைத்துத் தேடுதல் வேட்டையில் இறங்கிவருகின்றனர். இந்த வேட்டையில் ஒவ்வொரு வீடும் சல்லடை போட்டுத் தேடப்படுகின்றது. இச்சந்தர்ப்பங்களில் 14 வயதுக்கும் 40வயதுக்கும் இடைப்பட்ட எந்தவொரு தமிழரும் தப்புவதில்லை.

இவ்விடயம் குறித்து திருகோணமலையைச் சேர்ந்த அரச ஊழியர் ஒருவர் பின்வருமாறு தெரிவித்தார் "அவர்கள் எங்களைத் தங்கள் முகாமிற்குக் கொண்டு சென்று வயதிற்கும், தொழிலுக்கும் ஏற்றவாறு எங்களை வரிசையாக நிற்கச்செய்தார்கள். அதன் பின்பு சாக்கு ஒன்றைத் தலையில் மாட்டிக் கொண்ட ஒருவர் வந்து இளைஞர்கள் ஒவ்வொருவரையும் சுட்டிக்காட்ட, அவர்கள் தனியாக வரிசைப்படுத்தப்பட்டனர். சாக்கால் மூடிக்கொண்டவர் தங்களுக்குத் தகவல் கொடுப்பவர் என்றபோதிலும் ராணுவ சிப்பாய் என்றே தோன்றியது.

இவர்களில் ஒரு இளைஞர் எனது உறவினர் சமீபத்தில் தான் தொழில்நுட்பக் கல்வியை முடித்துக்கொண்டு ஜப்பானிய நிறுவனத்தில் தொழில்வாய்ப்பு பெற்றார் இவர்கள் அனைவருமே பயங்கரவாதிகள் என்று பூஸா முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்."

அங்கே என்ன நடக்கிறது என்பதை கற்பனைசெய்து பார்க்கவேண்டியதுதான். கிழக்கு மாகாணத்திலுள்ள ஒரு குடும்பத்திலிருந்தாவது, ஒரு சகோதரன், ஒரு மகன், ஒரு கணவன் யாராகிலும் ஒருவர் தடுப்பு முகாமிற்கு அழைத்துச் செல்லப்படாமலில்லை

மட்டக்களப்பு பிரஜைகள்

[11-ம் பக்கம் பார்க்க]

## தொண்டர்தம் பெருமைக்குரிய பெரியதம்பி

'ஈழநாடு' பத்திரிகையின் ஆரம்பகால ஊழியர் மறைந்தார் என்ற செய்தி இக்காலத்துக்குரிய 'இன்ஸ்டன்' செய்தி.

பெருமகன் பெரியதம்பி ஒருசாதாரண ஊழியர். "நேற்று வாழ்ந்தார்; இன்று இறந்தார் என்ற நிலையாப் பெருமையுடையது இவ்வுலகம்" என்பதை நிருபித்துவிட்டார்.

சமுதாயத்தின் தொடர்பான எண்ணங்கள் தீராத் துன்பத்தின் வடிவெடுத்திருக்கும் இக்காலகட்டத்தில் தனிமனிதன் தொடர்பான எண்ணங்கள் எவ்வித அதிர்ச்சியும் அளிக்கா. ஆனால் தொண்டன் பெரியதம்பியின் மறைவு இதற்கொரு புறநடை.

மழையிலும் வெயிலிலும் குண்டுக்கும் கொலைகாரருக்கும் அஞ்சாது கடமையும் நேர்மையும் தம் இரு கண்களெனக்கொண்டு பணிபுரிந்த ஊழியர் இவர். ஸ்தாபனம் காவிளுல் ஏவிய வேலையைக் கையினுற் செய்துமுடித்த கர்மவீரன்.

திரைமறைவில் தன்னலமற்ற சேவையில் வாழும் கதாநாயகர்கள் மேடை ஏறுவதில்லை. ஆனால் 'அடித்த ஏருக்கும் குடித்த கூழுக்கும் சரி' என்று சொல்லாமல் ஸ்தாபனத்துக்கு ஏற்றவகையில் அபிமானித்து சம்பள விருத்திபெற்று வாழ்வைச் சமாளித்து வந்த உண்மைத் தொழிலாளி.

அவ்வுலக வாழ்வின் அமைதியே உருவெடுத்தாற்போல் வாழ்ந்து வந்த இந்த நன்மனிதனை, காலமறிந்து ஆண்டவன் அரைவயதில் அழைத்தானே? யார் அறிவர்?



## பண்டிதமணி நினைவஞ்சலி

நூலாந்
தொண்டினை அவர்மா
ணுக்கர்
தொடங்கியே தொடர
வேண்டும்
அண்டிய திருநெல்வேலி
அகத்தினை அவர்ன்
பேரால்
வண்டமிழ்க் கழக மாக
மாற்றவும் வேண்டும்;
சாந்தி;

—"சாரதா"

### பண்டிதமணிபோல் வல்லார் யாரோ?

நற்றமிழ் சைவம் காத்த
நாவலர் நெறியில் நின்றே
பற்றுடன் சேவை செய்த
"பண்டித மணி" யார்
இன்று
சொற்பெறு மெண்பத்
தேழாய்த்
தொடர்புறு வயதின்
எல்லை
சிற்பரன் திருவ டிக்கீழ்ச்
சீவமுத் தராய மர்ந்தார்!

கேட்டவர் தமைப்பி
ணித்துக்
கேட்டிடா தவரும் வேட்ப
மாட்சியால் மொழிபுஞ்
சொற்கள்
மரபியல் வழுவாப்
போக்கு
ஆட்கொளும் அமைதித்
தோற்றம்
அனைத்தொருங் கமைந்த
மேதை
வாட்டிடும் நோய் போல.
ஆட்சி
வலுப்பதை யுணந்தோ
போனார்?

கம்பனை வில்லி தன்னைக்
கச்சியை மற்று முள்ள
செந்தமிழ்ப் படைஞர்
தம்மைத்
திறந் தெரிந் துணர்த்த
வல்ல
கந்தனை யனைய வெங்கள்
கணபதிப் பிள்ளைப் பேரார்
பண்டித மணிபோல்
யாரோ
பைந்தமிழ்க் குதவ
வல்லார்?

பண்டித மணியின் ஆக்கப்
படைப்புக ளனைத்தும்

### சித்தாந்த சாகரமே

சித்தாந்த சாகரமே
செந்தமிழின் காவலனே
முத்தான முத்தமிழை
மூச்சாகக் கொண்டவனே
சத்தாகவே தமிழை
சந்த தமும் காத்தவனே
பித்தாகிப் போகுதையா
பைந் தமிழர் கூட்டமிங்கே.

ஆன்ற தமிழ்க்கடலே
அறிவின் பெருநிலவே
தோன்றிப் புகழ் பூத்த
தூயவனே தீந்தமிழா
ஊன்றித் தமிழ்படிக்க
உமை எங்கே காண்பதுவே
சான்றோனாய் நாவலனின்
சந்நிதிக்கு ஏகினையோ

இலக்கியத்தின் பெட்டகமே
இலங்கும் பெருநிலவே
கலங்கும் இதயங்கள்
கண்ணீரைப் பெய்துநிற்க
உளங்கொண்டு ஏகினையோ
உம்பர்பணி செய்ய வென்று
களங்கமில்லாக் களிநிலவே
காசினியில் பேரரசே

கன்னித் தமிழ் காத்த
கலாநிதியே காவலனே
உன்னி உளம் நெகிழ
ஊரெல்லாம சோர்ந்துவிட
சென்னி மேல் கைகூப்பி
சேவித்து செஞ்சடையான்
நன்னிழலை நாடியங்கு
நாயகமே சென்றனையோ.

—மதிவதனி வேலாயுதம்.

## மானிப்பாய் இந்துக் கல்லூரியை

# வளர்த்தெடுத்த 'முத்து'

மானிப்பாயில் ஒரு சிறந்த சைவ மரபுகள் நிறைந்த குடும்பத்தில் உதித்தவர். மேற்படிப்பைக் கொழும்பு றோயல் கல்லூரியிலும் பின்னர் இலங்கைச் சர்வகலாசாலைக் கல்லூரியிலும் கற்று விஞ்ஞானப்பட்டதாரியானார். கொழும்பு றோயல் கல்லூரியில் படிப்பில் முதன்மைபெற்றதோடு கிரிக்கெட் வீரராகத் திகழ்ந்தார். விளையாட்டுத் துறையிலும் சிறந்து விளங்கினபடியாற்போலும், இவர் சர்வகலாசாலைக் கல்லூரியிலிருந்து வெளியேறும்போது பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் ஒரு தூணாகக் கருதபபட்ட கல்லூரி அதிபர் பேராசிரியர் மார்ஸ் (Prof. Marrs) இவருடைய நற்சாட்சிப் பத்திரத்தில் "He has an excellent personality" என்று குறிப்பிட்டதாகக் கேள்விப்பட்டதுண்டு. தோற்றம் (Personality) என்பது ஒருவரின் ஆளுமையைக் குறிக்குமென்பது நோக்கற்பாலது.

சில காலம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றிய பின் கொழும்பு ஆசிரியர் கல்லூரியில் பயிற்சிபெற்றுப் பலாலி ஆசிரியர் கல்லூரியில் விரிவுரையாளராகப் பதவியேற்றார்.

அவரின் சீரியத் திறமையில் அபிமானம்கொண்ட பலர் ஒரு சிரேட்ட கல்லூரி முதல்வராக்க முயன்றனர்.

ஆனால் அமரரின் சிறந்த சேவை தனது சொந்த ஊருக்கே உரித்தானது என்ற



நோக்கோடு மானிப்பாய் இந்துக் கல்லூரி முகாமையாளர்கள் விடுத்த அழைப்பை ஏற்று இக்கல்லூரியின் அதிபராகக் கடமைபுரிந்தார்.


பழம்பெருமை வாய்ந்த மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நவீன தோற்றத்தின் சிற்பியாகத் திகழ்ந்தார். இவருடைய காலத்தில் மிகப் பழைய பாரம்பரியங்களைக் கொண்ட மானிப்பாய் இந்துக் கல்லூரி பல துறைகளிலும் சிறந்தோங்கியது சமயம், கலை, விஞ்ஞானம், விளையாட்டு, நாடகம், சங்கீதம் முதலிய துறைகள் குறிப்பிடத்தக்சன. பழைய மாணவர், பெற்றார், ஊர்மக்களின் முயற்சியுடன் சிறந்த வகுப்பறைகள், மண்டபம், விளையாட்டுகளைப் பார்க்கும் கட்டடம் ஆவன தோன்றின.

**க. கிருஷ்ணபிள்ளை**

விஞ்ஞானப் பட்டதாரியாகிலும், மெஞ்ஞானத்தில் பற்று வைத்துச் சிறந்த சமய நூல்களைக் கற்பதிலும் சமய வழ்க்கை வாழ்வதிலும் ஈடுபட்டிருந்தார். யாழப்பாணம் ஈன்ற மெய்க் குருவான யோகர் சுவாமிகளில் பற்றுக்கொண்டு, அவரின் அடியார்களோடு பிரார்த்தனைகளில் ஈடுபட்டு வந்தார் ஒரு இந்துக் கல்லூரியின் அதிபர் என்ற முறையில் அமரருடன் பல்வகைப்பட்ட கல்வி விடயங்களில் கலந்துரையாடவேண்டிய சந்தர்ப்பங்கள் எனக்கிருந்தன. எந்த விடயத்திலும், எந்தப் பிரச்னையிலும் காய்தல் உவத்தலின்றி நிதானமான, நீதியான முடிவெடுப்பதில் மிகத் திறமையுள்ளவர். மானிப்பாயின் சைவ சங்கங்களில் முக்கிய பங்கேற்றுச் சேவைசெய்தார். பிற்காலததில் இளைஞர்களே சேவை செய்தல் நலமென்று கருதித்தான் ஓரளவிற்கு ஒதுங்கிவிட்டார். தாய் தந்தை இட்ட நாமத்திற்கேற்ப "முத்தான" சொற்களை மிக அமைதியான முறையில் சொல்லுவார். தன்னை மற்றையோர் புகழுவதை ஒருபோதும் விரும்பாத பெருமகன். His life was gentle, and he left this world in a very gentle way. அமைதியாக வாழ்ந்து அமைதியாக மறைந்தார். அரிய மனிதன் முத்துவேற்பிள்ளையின் ஆன்மா இறைவன் திருவடியில் என்றும் வாழ்க வென்று பிரார்த்திப்போம்.

## 3

# கரை சேரும் கட்டு மரங்கள்




ஓரப்பாய் சிவம்

ஜானகியின் மனப்போராட்டத்தையும்இரட்டை மன நிலையையும், அந்தச் சிறிது நேர உரையாடலில் முகுந்தனால் உணரமுடிந்தது. அவளுக்கு ஆறுதல் சொல்லவும் முடியாத நிலை அவனுக்கு. தான் ஒரு முடிவுக்கு வந்து அவளது அமைதியான வாழ்க்கைக்கு வழி செய்ய வேண்டும் என அவன் உணர்ந்தான். முரளியை அவன் நேரில் சந்தித்துப் பேசலாமா வேண்டாமா? என்ற இரட்டை மன நிலை அவனுள்ளத்தில் போரை நிகழ்த்தியது. இது பற்றி ஆழ்ந்து சிந்திக்க முடியாமல் இப்போது அவனுக்கு நிறைய வேலைகள் இருந்தன.

கப்பலில் ஓடியாடி வேலை செய்து பழகிப் போயிருந்த அவனது கைகளும் கால்களும் துறுதுறுத்தன இதயம் ஏங்கிக் கொண்டிருந்தது செய்! அல்லது செத்துமடி! சொந்தச் சகோதரர்களுக்கு இன்னல் நேர்ந்திருக்கும் இந்த நேரத்தில் அவர்களுக்காக அவன் ஏதாவது செய்தாக வேண்டும் என முனைந்துநின்றான். வெளியூர்களிலிருக்கும் உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பதையே அறிய முடியாமல் இங்கு தவித்துக் கொண்டிருந்தவர்களுக்கு ஆறுதல் சொல்லி அந்த விபரங்களை அறிந்து உதவுவதில் ஈடுபட்டான். அகதிகளாக வரத் தொடங்கியிருந்த பலருக்கும் வேண்டிய உதவிகளைச் செய்து தன் மன உளைச்சல்களைப் போக்கிக் கொண்டிருந்தான்.

முரளியைப் பற்றிய விபரங்களையும் சேகரிக்க அவன் முயன்றான். கடைசியில் கப்பல் மூலம் காங்கேசன்துறையில் வந்திறங்கிய அகதிகளில் முரளியும் ஒருவனாக வந்துள்ளதாகக் கேள்விப்பட்டு நிம்மதியடைந்தான். தகவலை ஜானகிக்கு அனுப்பிவிட்டு அவன் காங்கேசன்துறைக்குப் புறப்பட்டுவிட்டான்.

காங்கேசன்துறையில் அவன் அகதிகளுக்கான உதவிகளை விரைந்து செய்து கொண்டிருக்கையிலேயே முரளியை அப்போதுள்ள நிலைமையில் சந்திப்பதா இல்லையா? என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

கொழும்பிலேயே ஒரு சொந்த வீட்டை வாங்கி அங்கேயே தனது முழு வாழ்க்கையையும் அமைத்துக் கொண்டிருந்தவன் முரளி. யாழ்ப்பாணத்தில் நெருங்கிய உறவினர்கள் என்றோ சொத்து சுகங்கள் என்றோ எதுவித பிடிப்புமில்லாமல் தலைநகர் வாழ்க்கையில் ஊறிவிட்டிருந்தது அவனதுகுடும்பம் இப்போது முரளியும்அவனதுகுடும்பத்தினரும் எதுவுமற்றவர்களாக அகதிகளாக வந்திறங்கி முகாமிலேயே இருக்கின்றனர். இந்த நிலையில் ''நான்தான் உங்கள் மனைவியின் முன்னாள் காதலன்'' என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டு எப்படி அவன் முன்போவது? இந்தத் தயக்கத்தினால் முகுந்தன் எட்டவே நின்றுகொண்டான்.

முரளி அகதியாய் வந்திறங்கியிருப்பதை அறிந்த ஜானகியின் தந்தை தான் நேரில் போய்ச் சந்திக்க விருப்பமில்லாமல் தூரத்து உறவினரொருவரை முகாமுக்கு அனுப்பியிருந்தார். அவர் வந்து 'குசலம்' விசாரித்த பொழுது முகுந்தன் வெளிநாட்டிலிருந்து திடீரென வந்திறங்கிய செய்தியும் கூறி அவனைத் தூரத்தில் வைத்து அடையாளம் காட்டவும் செய்தார்.

முரளியும் முகுந்தனைச் சந்தித்துப் பேச ஆர்வமிருந்தும் சந்தர்ப்பம் சரியாக அமையாததால் அதனைத் தவிர்த்துக் கொண்டான். நாலைந்து நாட்களில் முரளி ஜானகியைத் தேடி வந்தான். இப்போதையமனநிலையில் ஜானகி தன்னை எவ்விதம் வரவேற்பாள் என்பது அவனுக்கு ஒரு பரீட்சை வினா. முகுந்தன்வந்து விட்டான் என்பது ஒரு புறத்தில் ஏற்பட்ட தாக்கம். முரளி ஒன்றுமில்லாதவனாகி விட்டான் என்பது இன்னொரு புறத்தில் ஏற்பட்ட தாக்கம். இந்த இருபுறத் தாக்கங்களின் விளைவுத்திசை எத்தகையது?

ஜானகி ஒரு ஜடமாகவே மாறிவிட்டிருந்தாள். தனக்கும் தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் ஏன்தான் இப்படித் தொல்லைமேல் தொல்லைகளாக வந்து கொண்டிருக்கின்றன? முகுந்தன் வந்து சேர்ந்திருப்பதால் ஏற்பட்டிருக்கும் புதிய திருப்பம், இதில் தான் எந்தமுடிவும் எடுக்கமுடியாமல் தவிப்பது...... முகுந்தன் வந்துவிட்ட செய்தியை முரளி அறியும்போது என்ன திருப்பம் ஏற்படலாம்? அவன் இவளது மனப்போராட்டத்தை எவ்விதம் அணுகுவான்? என்றெல்லாம் குழம்பியிருந்த ஜானகிக்கு முரளி எல்லாம் இழந்து அகதியாக வந்து சேர்ந்த செய்தி பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. இப்போது முரளி தன்னருகில் வந்து நின்றவுடன்-

இருவர் கண்களும் கலங்கின. கனத்த மௌனத்திரை நடுவில் நின்றது. சில நாட்களாக வற்றிப்போயிருந்த கண்ணீர் வெள்ளம் கரை புரண்டது ஜானகிக்கு. அவளைத் தேற்றுவதற்குரிய உரிமையும் தகுதியும் தனக்கு உண்டா? என்ற சந்தேகத்துடன் மெதுவாக வார்த்தைகளை அளந்து பயன்படுத்தினான் முரளி.

# குறுநாவல்

ஜானு, ஒரு பெண்ணின்ரை வாழ்க்கையிலை நடக்கக் கூடாதது எல்லாம் உன்ரை வாழ்க்கையிலை நடக்குது. விதியை நாங்கள் என்னசெய்யலாம் ஜானகி நடந்தது நடந்திட்டுது. இனி நடக்கப் போறதை நினைச்சுப் புதுவாழ்க்கைக்கு எங்களை நாங்கள் சித்தப்படுத்துறதைத் தவிர வேறுவழியில்லை.

கலங்கிய அவனது கண்களில் படிந்த கண்ணீர்த் திரையில் கரைந்த ஓவியமாகத் தெரியும் முகுந்தனைப் பார்த்தபடி மௌனித்திருந்தாள் ஜானகி முரளி துயரம் ததும்ப அவளையே சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு மௌனமாக விடை பெற்றான்.

★

முதிய தலைமுறை தன் நரை மயிர்களைக் கருமயிர்களுக்கிடையில் மறைக்க முயற்சித்தது. தொப்பையைத் தடவி விட்டுக்கொண்டு கூட்டல் கழித்தல் கணக்குப் பார்த்தது வெறும் இலக்கங்கள், வெற்று வார்த்தைகள், வெளி வேஷங்கள், உள்ளே அமுக்கப்படும் உஷ்ணப் பெருமூச்சுக்கள். பூச்சுக்களுக்குள் ஒளிந்திருக்கும் விகாரங்கள் நெளியும் உணர்ச்சிப் புழுக்களைத் துச்சமாக மதிக்கும் வெளித் தோல்கள்........ ஓ சமுதாயமே! இளைய தலைமுறையின் உணர்ச்சிகள் நிறைந்த உள்ளங்களை நீ எவ்வளவு சுலபமாக மிதித்து நசிக்க முயற்சி செய்கிறாய்.

ஊரில் ஜானகியின் பெற்றோர் அவளுடைய எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்காகத் தரவுகளை வகைப்படுத்தி தேற்றங்களைப் பயன்படுத்தி புதிர்களை விடுவிக்க முனைந்துகொண்டிருக்கின்றனர்.

முகுந்தன் திருப்பி வந்துவிட்டான். லட்சாதிபதியாக, அவனுடைய சொத்துகள் வங்கிக் கணக்குகளில் இலக்கங்களாகவும், தொலைக்காட்சிப் பெட்டியாகவும், குளிர்சாதனப் பெட்டியாகவும், மோட்டார் சைக்கிளாகவும், இதுபோன்ற பிறபொருள்களாகவும் பத்திரமாக இருக்கின்றன. அவன் யார்? எங்கள் மகளின் பழைய காதலன்... சீ! இப்பிடி நாங்கள் - முதிய தலைமுறையினர் சொல்வதா? அவன் இவளை மணம் முடிக்க விரும்பியவன். இவளுக்கும் அவனைச் செய்யத் தான் விருப்பம்.

இடையில் தவறு நடந்து விட்டது. முரளியார்? வெறும் மனிதன், சொத்துக்கள், சுகங்களைப் பறிகொடுத்து விட்டுப் பொறுப்புக்களையும் நம்பிக்கையற்ற எதிர்காலத்தையும் சுமந்துகொண்டு எங்கள்இனத்தைப் போலவே திக்கற்ற நிலையில் நிற்கும்அகதிதான்முரளி. அவனை மணந்து எங்கள் மகள் நிர்க்கதியாய்த் தவிப்பதா? காலம் கடந்துவிடவில்லையே? திருமணப் பதிவுமட்டும்தானே நடந்தது. அதைத் தள்ளி விட்டு...

''பெரியோர்களே! நீங்கள் தானே சட்டங்கள், சம்பிரதாயங்கள் , நீதிநியாயங்கள்பற்றியெல்லாம் வாய்கிழியக் கத்துபவர்கள் இப்படி ஒரு முரண்பாடான காரியத்தைச் செய்யலாமா? காலங்காலமாகக் கட்டிவந்த உங்கள் குலப் பெருமைஎன்னுவது? ''மெல்ல முணுமுணுக்கும் பலவீனமான மனக்சாட்சியின் குரல்.

'மூச்!' சந்தர்ப்பங்கள் வாய்க்கும்போது சம்பிரதாயமாவது, குலப் பெருமையாவது. .'' நரைத்துச் சடைத்த மீசையின்அடியில் காவியேறிய பற்கள் சிரிக்க முயல்கின்றன.

ஜானகியின் பெயரைச் சுமந்து கொண்டு தந்திச் செய்தியொன்று தபாலில் பிரயாணம் செய்தது.

★

''புதுவாழ்க்கைக்கு எங்களை நாங்கள் சித்தப்படுத்துகிறதைத்தவிர வேறு வழியில்லை... என்று என்ன துணிச்சலில் நான்அவளிடம் சொல்லிவிட்டு வந்தேன். என்னிடம் என்ன இருக்கிறது? எல்லாம்இழந்து... தொழிலும் கூட என்னவாகும் என்ற நிச்சயம் இல்லாமல் ஒரு இருண்ட எதிர் காலத்தையுடைய நான் அவளுக்கு என்ன வாழ்க்கையைக் கொடுக்கப் போகிறேன்'' முரளியின் இதயம் அலைபாய்ந்து கொண்டிருக்கிறது.

'அவள் பூரணமாக எனக்குரியவளல்லவே! அவளுடைய உடலை சட்டம் எனக்குத்தரச் சம்மதித்தாலும் அவளுடைய உள்ளம் முழுமையாக என்னை நாட முடியாது. அந்தக் காதலுள்ளத்துக்குச் சொந்தக்காரன்வேறொருவன். அவன் வந்துவிட்டான். முகுந்தனும், ஜானகியும் ஒன்றுசேர வைப்பதுதான் நான் செய்ய வேண்டியது.''

எனக்கே உரிமையான என்னுடைய உடமைகளையே இழந்துபோய் வந்திருக்கும் நான் இன்னொருவனுடையபொருளை எதற்காக அபகரிக்க வேண்டும். அவளை மணந்துதான் நான் இனி என்ன வாழ்க்கையை வாழப் போகிறேன். என்னுடைய வாழ்க்கையின் ஒரு முழுமையான அத்தியாயம் நிறைவாகிவிட்டது. இனி நான் வேறொரு புதிய வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும்.

'முகுந்தன் செய்யும் பணி எத்தகையது? அவனது மனவுறுதிதான் எப்படிப்பட்டது. தன்னுடைய விலைமதிக்க முடியாத சொத்தை இன்னொருவன் அபகரித்து விட்டான் என்று அறிந்தபின்பும் அதற்காக ஆத்திரமோ பொறுமையோ கொள்ளாமல் தனது மக்களுக்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்துவிட்ட அவனது மனப்பான்மைதான் எனக்கு வழிகாட்டி. நான் எனது மக்களுக்காகச் சேவை செய்யவேண்டும். மக்களுக்காக ஏர் எடுப்பவன் உழவன். அவன் வயிற்றுக்குச் சோறு போடுபவன். மக்களுக்காக எழுதுகோல் எடுத்தவன் எழுத்தாளன். அவன் அறிவுக்கும் சிந்தனைக்கும், சோறு போடுகிறான். மன உணர்வுகளுக்கும் ஏக்கங்களுக்கும் தீனிபோட்டு எதிர்கால வாழ்க்கையை உருவாக்குவதற்கு நான் எதையாவது எடுத்தாக வேண்டும். ஆம் நான் அவர்களை இணைத்துவிட்டுப் புறப்படுவேன்.

முகுந்தனை நாடி அவன் புறப்பட்டுக் கொண்டிருக்கும்போது அவனது செய்தியைத் தாங்கிய கடிதம் ஜானகியை நோக்கி நகர்ந்தது.

★

துன்பப்பட்டவர்களுக்காக உழைக்கும்போது அதில் எத்தனை இன்பம் இருக்கிறது. வெறுமனே சொத்து சுகங்களும், பெண்டிர் பிள்ளைகளும் என்று வாழ்வதுதானா வாழ்க்கை? எங்களுக்கு மட்டுமே என்று வாழாமல் பிறருக்காகவும் வாழும் இந்த வாழ்க்கையையே எனது வாழ்க்கை பூராவும் நீடிக்கச்செய்யவேண்டும்! முகுந்தனின் சிந்தனை வளர்ந்தது.

காதல் என்பது கருகிவிட்டதும் துன்பம் ஏற்படுவது தவிர்க்க முடியாததுதான். ஆனால், அவள் இனிய வாழ்க்கையை வாழட்டும்; முரளி நல்லவர், அவரோடு ஜானகி வாழவேண்டும்; என்னைமறந்து நான் எங்காவது ஓடிப்போய் விடவேண்டும். அப்போது தான் அவர்கள் மகிழ்ச்சியாக வாழமுடியும்.

முகுந்தனின் செய்தியைத் தாங்கிய கடிதம் ஒன்று ஜானகியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

★

ஜானகி குழம்புகிறாள்.

வாழ்க்கை என்பது இது தானா? ஏமாற்றங்களே எதிர் கொண்டிருந்தால் எப்படிமுன்னேறுவது? எனக்குஏமாற்றம். முகுந்தனுக்கு ஏமாற்றம், முரளிக்கு ஏமாற்றம். நான் முகுந்தனை இழந்து முரளியை ஏற்கும் படி நிர்ப்பந்தம். முகுந்தன் எல்லை இழந்து சொத்துச் சுகங்களைத் தேடி என்னைத்

(8-ம் பக்கம் பார்க்க)

## கசிப்புக் கந்தப்பர்

காலையிலே எழுந்தவுடன் கந்தப்பர் ஓடி
கசிப்புவிற்கும் கணபதியின் கால்தனிலே வீழ்ந்தார்
நாலைந்து நாளாக நான்பட்ட பாடு
நலிகின்றேன் கசிப்பின்றி என்தொண்டைவாடி
வேலைக்குப் போனவென்தன் இளையமகன் செல்லன்
விறகுக்காய் வைத்தபணம் விரல் விட்டுத்திருடி
காலைக்கே வந்துவிட்டேன் கசிப்பதனை நாடி
கணபதியின் மகளே தா காப்போத்தல் என்றார்.

ஓலைக்குடிசையிலே ஒன்றாகக் கிடந்த
ஒன்பது பேர் கண்களிலும் மண் அள்ளித் தூவி
சேலைக்குள் வைத்தபணம் சிலவற்றைத் திருடி
சேர்த்திங்கே வந்துவிட்டேன் சீரான கசிப்பை
காலைக்கே குடிக்காட்டி கந்தப்பன் வயிறு
களைத்துவிடு மாதலினால் காப்போத்தல் ஊற்றி
மூலைக்குள் ஒளித்துவிட்டேன் முத்தமகன் வாறான்
முறையாக மாட்டிவிட்டேன் முருகா நீ துணையே.

வேலையற்ற வீண்பொடியள் வீடுகளில் சென்று
விற்காதே கசிப்பென்று வீணாகச் சொல்லி
சாலைகளில் ஊத்தினமாம் சபாபதியின் கசிப்பை
சண்முகத்தார் கசிப்போடை சந்தியிலை நிறுத்தி
மூலையிலே வடிப்பித்த முத்தர்தம் மகளும்
முட்டியுடன் வீதியிலே ஊர்வலமாய்ச் செல்ல
காலைக்கே கசிப்படிக்கும் கந்தப்பன் இனிமேல்
களைப்புக்கு என்செய்வேன் கந்தா நீ கூறு.

— ஆவூர்க்குமரன்

# நாடோடிக் கதைகள்

✶ தமிழில்: நீர்வை பொன்னையன்

## எதிர்பார்ப்பு

ஒருநாள் தி என் சான் என்ற ஞானி கந்தல் உடையில் இளவரசனைப் பார்க்கச் சென்றார்.

''மகானே நீங்கள் அலங்கோலமான, வெறுக்கத்தக்க கந்தல் உடையில் வந்திருக்கின்றீர்களே, என்ன காரணம்?''

—இளவரசன் ஞானியைக் கேட்டான்.

''இந்த உடையிலும் பார்க்க மிக இழிவான வெறுத்து ஒதுக்கித் தள்ளவேண்டிய உடைகள் இருக்கின்றன,''

—தியன்சான் கவலையுடன் கூறினார்.

''அவை எவைகளாக இருக்கும்!''

''அவைகள்தான் போர்க் கவசங்கள், உலகில் வெறுக்கத்தக்கவை''

''இதன் அர்த்தம் என்ன?''

—இளவரசன் ஒன்றும் புரியாமல் கேட்டான்.

''மாரிகாலத்தில் குளிராக இருக்கின்றது; கோடைகாலத்தில் வெப்பமாக இருக்கின்றது. ஆகவே போர்க்கவசங்களிலும்பார்க்கக் கேடுகெட்ட உடைகள்எவையுமில்லை. நான் வறியவனாக இருப்பதால்எனது உடைகள் கந்தலாக இருப்பது இயற்கை. ஆனால் பத்தாயிரம் போர் இரதங்களையும், அளவற்ற செல்வத்தையும், வைத்திருக்கும் ஒருஇளவரசன் நீங்கள். அப்பிடியிருந்தும் மனிதர்கள் போர்க் கவசங்கள் அணிந்திருப்பதை நீங்கள் விரும்புகின்றீர்களே, இதை என்னால் என்னவென்று புரிந்துகொள்ள முடியவில்லை. ஒருவேளை நீங்கள் புகழைச் சம்பாதிக்க விரும்புகின்றீர்களா? ஆனால், மனிதர்களுடையதலைகள் வெட்டிக்கொய்து உருட்டப்படுகின்ற, உடல்கள் குத்திக் கிழிக்கப்பட்டுக் குதறப் படுகின்ற, அவர்களுடைய நகரங்கள் தரைமட்டமாக்கப்படுகின்ற, அவர்களுடைய பெற்றோர்களும், பிள்ளைகளும் சித்திரவதை செய்யப்படுகின்ற யுத்தத்தில், கேவலம் வெறும் புகழுக்காகப் போர்க் கவசங்கள் அணியப்படுகின்றன. இதிலும் பார்க்க மிகக் கேவலமான, இழிவான செயல் வேறு என்ன இருக்கவேண்டும்? அல்லஒருவேளை நீ வேறு என்ன இலாபத்தை எதிர்பார்க்கின்றாய்? நீ மற்றவர்களுக்குத் தீங்குசெய்ய முனைந்தால் மற்றவர்கள் உனக்குத் தீங்குசெய்ய முனைவார்கள் நீஅவர்களுடைய உயிர்களுக்குப் பேராபத்தை உண்டாக்கினால் உனது உயிருக்கு அவர்கள் ஆபத்தை உண்டாக்குவார்கள். யுத்தத்தின் மூலம் உனது சொந்த மக்களுக்குத் தொல்லைகள் விளைவிப்பதைத் தவிர வேறு எந்த இலாபத்தையும் நீ அடைய முடியாது. நான் உன்னைப்போல அதிகாரத்திலிருந்தால் எக்காரணத்திற்காகவும் யுத்தம் செய்ய மாட்டேன்''



—ஞானி ஆணித்தரமாகக் கூறினார்.

இளவரசனால் இதற்கு ஒன்றும் கூறமுடியவில்லை.

## என்னைப் புகழ்வாயா?

ஒரு செல்வந்தனும் ஒரு வறியவனும் கூடிக் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

''என்னிடம் நூறு அவுன்ஸ் தங்கம் இருக்கின்றது. அதில் இருபது அவுன்ஸ் தங்கத்தை நான்உனக்குத் தந்தால்என்னை நீ புகழ்வாயா?''

—திடீரெனச் செல்வந்தன் ஏழையைக் கேட்டான்.

''அது சரியாகப் பங்கீடு செய்யப்படாமலிருக்கும் பொழுது உன்னை நான் எப்படிப் புகழ முடியும்?''

சரி, அப்படியென்றால், நான் என்னிடமுள்ள தங்கத்தில் அரைவாசிப் பங்கை உனக்குக் கொடுத்தால் என்னைப் புகழ்வாயா?''

''அப்பொழுது நாம் இருவரும் சமமான நிலையிலுள்ளவர்களாக இருப்போம். ஆகவேநான் உன்னை ஏன் புகழ வேண்டும்?''

என்னிடமுள்ள எல்லாத் தங்கத்தையும் நான் உனக்குத் தந்தால், அப்பொழுதாவது என்னை நீ புகழ்வாயா?''

''என்னிடம் எல்லாத் தங்கங்களுமிருந்தால் உன்னை நான் புகழவேண்டிய அவசியம் ஏற்படாதே'' என்றான்.

''செல்வந்தன் திருதிருவென முழித்தான்.

## வச்சிராயுதம்

சுகவீனமுற்றிருந்த தனது நண்பனைப் பார்ப்பதற்கு ஒருவன் நீண்டதூரம் பிரயாணம் செய்து அவன் இருப்பிடத்தை அடைந்தான். அவன் நண்பனின் இடத்தை அடைந்த பொழுது, அயல்நாட்டுப்படைகள் அந்தப் பிரதேசத்தை ஆக்கிரமித்துத்தாக்கிக்கொண்டிருந்தன.



''நான் விரைவில் இறந்து விடுவேன். உன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கு இந்த ஆபத்தான இடத்தைவிட்டு நீ உடனே போய்விடு''.

நோயாளி நண்பனுக்குச் கூறினன்.

''உன்னைப் பார்ப்பதற்கு நான் நீண்டதூரம் பிரயாணம் செய்து வந்தேன். இப்பொழுது நீ என்னைப் போகும்படி கூறுகின்றாய். நீ ஆபத்தான நிலையிலிருக்கும்பொழுது நோயாளியான உன்னைத் தனியே விட்டுவிட்டு என்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கு எனது மனச்சாட்சிக்கு மாறாக எப்படி நான் நடக்கமுடியும்.

நண்பன் அந்த இடத்தை விட்டு நகரவில்லை.

''எங்கள் மாபெரும் சேனை இங்குவந்து கொண்டிருக்கின்றது என்பதை அறிந்து இப்பிரதேசத்திலுள்ள எல்லா மக்களும் ஓடிவிட்டார்கள். நீ மாத்திரம் இங்கு தங்கியிருப்பதற்கு உனக்கு என்ன துணிச்சல்?''

படைத் தளபதி கோபாவேசமாகக் கேட்டான்.

''எனது நண்பன் சுகவீனமுற்றிருக்கின்றான் என்பதை அறிந்து நீண்டதூரம் பிரயாணம் செய்து நான் அவனைப் பார்க்க வந்தேன். நோய்வாய்ப்பட்டிருக்கும் அவனைத் தனியே விட்டுவிட்டு என்னால் எப்படிப் போகமுடியும்? எனது உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஒரு நோயாளியை ஆபத்தான நிலையில் விட்டுவிட்டுத் தப்பிஓடும் அற்பனல்ல நான். வேண்டுமானால் அவனுக்குப் பதிலாக என்னைக் கொன்று விடுங்கள்''.

—நிதானமாகக் கூறினன்.

''அன்பு தியாகம், தர்மம் ஆகிய நெறிகள் ஓங்கி நிற்கின்ற இந்த நாட்டின் மீது படையெடுத்து வந்த நாங்கள் பெரும் அவக்கேடான பாதகர்கள். இனி இப்படி மிலேச்சத்தனமான செயல் நடைபெறாது''

தளபதி அந்தரங்க சுத்தியுடன் கூறிவிட்டுத் தனது படைகளை வாபஸ்செய்து கொண்டு சென்றான்.

அந்தப் பிரதேசமும் காப்பாற்றப்பட்டது.

---

### கடலும் அலையும் -- 9

# மென்மைப் பண்புகளும் உறவுகளும்

பண்புகள் மலர இளமைக் காலத்திலேயே சிந்தனைக் கல்வி, பண்பாட்டுக் கல்வி; மனனக்கல்வி என்பன ஊட்டப்பட வேண்டும் என்பது முன்னைய கட்டுரைகளால் வலியுறுத்தப்பட்டன. அகலமாகக் சற்றுப் பல தகவல்களைத் [Information] தெரிந்தவர் அறிவில் உயர்ந்தவர் என்பது இன்றைய கணிப்பு. தகவல்களைத் தெரிந்தும் உலகியலை அறிந்தும் சிந்தனை வயப்படுத்துபவர் பேரறிஞர். இப்பேரறிவு பண்பாட்டைத் தோற்றுவிக்கும் சான்றாண்மையை உண்டாக்கும்.

பண்பாடு தோன்றவில்லையானல் கரவுள்ளத்தோடு பழகுவதானல் அறிவு தான் எதற்கு? படித்தும் பண்பாடு இல்லாதவர்கள் தம்சுயநலத்துக்காக, மென்முறையாளருடன் ஊடுருவிப் பழகுவர். உவப்பத்தலைக் கூடுவதற்காக நாவில் அமிர்தம் தோய்ப்பர். மாத்திரை போன்று நன்மை பயக்காது அமிர்தம் தோய்த்த நஞ்சைஉள்ளத்தில்பொருந்தியவராய் இருப்பர். ஆதலால் உவப்பத்தலைக் கூடிய உறவு அனைத்தும் உயர்ந்ததல்ல. மென்முறையாளர் தமது உறவுக்காக உதவிக் கொண்டிருக்க, நுனிநாவில் தடிப்பாக அமிர்தம் தோய்த்த வஞ்சனையாளர் இதயத்தோடு ஒன்றாத வார்த்தைகளைக் கொட்டித் தம்வலையில் வீழ்திக்கொள்வர். அகப்படுவோர் அவர்கள் கருமமெல்லாம் தம் கருமம் போன்று எண்ணிக்கொண்டு செயற்படுவர் இவர்களுக்கு நல்லது தீயதை ஆராயும் பக்குவம் இருப்பதில்லை, போலிகளை அசலாக எண்ணிவிடுவர். அநுபவம் கிடைக்கின்ற போதுதான் தமது மடமைக்காக வருந்துவர்.

வேலை கொள்பவர் ஒருவரிடம் வேலை செய்விக்கும் ஒருவர் வருகின்றார். முகவரும் [கொள்பவர்] சரி நாளைபார்ப்போம் என்கின்றார் வழமையானதோரணையில். மறுதினம் அதனைச் செய்ய மின்சாரம் உதவவில்லை. செய்விப்பவர் உரிய போருள்களைக்கொடுத்து நேரம் தாழ்த்தித் தனது பிரதிநிதியை அனுப்புகின்றார் முகவரும் சர்ந்தப்பம் சூழ்நிலையை உணர்த்த அவரும் நிலைமையை உணர்ந்து ஒப்புக் கொண்டு திரும்புகின்றார், பொது வேலையாகையால் வேறொருவர் அது விடயமாக வருகின்றார். இவ்வளவு காலமும் இயந்திரத்தில் இருந்து இயங்கியது தானே! இன்று மட்டும் பயன்படுத்துங்கள் நாளை திருத்தலாம் என்றார் முகவர். சரி அப்படியே செய்வோம் என்று ஒப்புக் கொண்டு சென்றவர் இயந்திரத்தைச் சுற்றி நாலு பேர் நிற்கையில் ஏனோ எடுத்தெறிந்து தாழ்த்தியுரைக்கின்றார். முகவரும் இதனையறிந்து வருந்துகின்றார். சிறுவனாக இருந்த போது என்னை நன்றாய் பயன்படுத்தியவர் இவர். பகையெதுவும் இல்லை. ஏன் தான் தாழ்த்துகின்றாரோ! என்முன்னிலையிற் பேசிய முன்னவர் போல இவரும் பேசியிருக்கலாமே. நாலு பேர் முன்னிலையிலா இழித்துரைப்பது ''செல்லிடத்துஞ் சினங் காத்தலே பெருமை'' என்னை எண்ணியும் என் தொடர்பை எண்ணியும் இவரேன் இருந்திருக்கக் கூடாது. என்றெல்லாம் முகவரின் மனம் எண்ணிக் கொண்டது. மேலும் இவரைக் காட்டிலும் என்னை என் முன்னிலையிற் தாக்கியவரே பெரியவர் என்றது, அவர் மனம். வள்ளுவரையும் நினைத்தது.

''எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைகெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு''

என்றாரிதனல் விழிப்பாக இருக்க வேண்டுமேயல்லாமல் பகை கூடாது. ''ஒன்றைக் கொடுத்தேனும் விலக்க வேண்டும்'' நல்லது தீயதை உணரும் திருவுடை யாரோடு பாராட்டுரைகளை - புகழ்ந்துரைகளை வைத்துக் கொள்ளல் கூடாது இதயத்தோடு ஒன்றிய உரைகள் கூட அருமையாக இயல்பாக அமைதல் வேண்டும். அல்லாது போனல் நட்பின் தகுதியை குறைத்து விடும்.

''இனையர் இவர் எமக்கு இன்னம்யாம் என்று
புனையினும் புல்லென்னும் நட்பு''

கருத்து ஒருமித்தலும் உய்த்துணர்வுமே நட்பின் உயர் எல்லையுள் சேர்க்கும் அது தானே உயர்ந்தது.

வட்டூர் எம். என்.
கடம்பேசுவரன்

---

# கன்றுபோல்களித்து வாழ்வீர்

கோமாதாஎங்கள்குலமாதா கோயில்களில் கோபூஜைக்கு முக்கிய அந்தஸ்துக் கொடுக்கப்படுகிறது. இந்துக்கள் தெய்வமாகப் போற்றும் பசு ஒவ்வொருவர் வாழ்வோடும் கலந்து நிற்கிறது. பசுவின் கன்று காளையானல் தன்னலமின்றி உழைக்கிறது. பசுக்களிற்கபிலை சிறந்ததென்பர். சில பசுக்கள் முலைவழியே பால் சொரிந்து கன்றுக்குக் கொடுக்கும். கன்றுக்கிரங்குமாப்போல் கைவழியேயும் பால் சொரியும். சில பசுக்கள் தானகவே பால் சொரியும் பக்குவம் மிக்கவை. இதை

'கனைத்திளங் கற்றெருமை கன்றுக்கிரங்கி
நினைத்து முலைவழியேநின்று பால் சொரிய' எனவும்
'ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள்'

என ஸ்ரீ ஆண்டாள் குறிப்பிடுகிறார் இளங் கன்றுகள் தாயின் மடியிலே பால் குடிக்கின்றன மடியை இழுத்து இடித்து ஊட்டும்போது கடைவாயில் பால் நுரைபடும். வாலையாட்டும். களிப்பினல் தாயும் நக்கி முத்தமிடுகிறது இதை.

''நாவால் நக்குது வெள்ளைப் பசு — பாலை
நன்றாய்க் குடிக்குது கன்றுக்குட்டி
முத்தம் கொடுக்குது வெள்ளைப்பசு — மடி
முட்டிக் குடிக்குது கன்றுக் குட்டி எனக் கவிமணியும்
''பாலைப் பொழிந்து தரும் பாப்பா - அந்தப்
பசு மிக நல்லதடி'' எனப் பாரதியும் பாடி மகிழ்கின்றார்கள்.

கள்ளங்கபடமில்லாத பசுக்களின் களிப்பை மனதிலே கொண்ட பிள்ளைப் பெருமாளையங்கார் அதைக் கருவாகக் கொண்டு ஒரு பாசுரம் தந்திருக்கின்றார். வருமாறு:

'என்றும் துயர் உழக்கும் ஏழைகாள்! நீங்கள் இளங்
கன்றுபோல் துள்ளிக் களித்துஇரீர் — அன்றுகடம்
இட்ட புயங்கத்து இரு சரணமே சரண் என்று
அட்ட புயங்கத்தாற்கு ஆளாய''

மனித இனம் வறுமை, செம்மை, இன்பம் துன்பம் இறுக்கம் நோய்மை சுகம் துக்க மென்னும் இரட்டைகளால் தாக்கமும் தளர்வுமடைகிறது. பொதுவாக நிம்மதியற்ற நிறைவில்லாத வாழ்வியலைக் கண்டுமனம் சோகமடைகிறது. கண்ணீர் சிந்துகிறது, வாழ்வே துன்பியல் நாடகமென்றுஒருபின்னணிக்கு தள்ளப்படுகிறது. இந்த வாழ்வியலைக் கண்ட திவ்வியகவி என்றும் துயருழக்கும் ஏழைகாள் எனப்பவ்வியமாயழைத்துப் பக்குவமான வாழ்வுக்கு ஆற்றுப்படுத்துகிறார் நீங்களெல்லீரும் ஏன் மனதை அலட்டி மகிழ்ச்சியை இழக்கிறீர்கள்? எல்லாமின்ப மயமே யென்று உங்களை நீங்களேன் வழிப்படுத்தக் கூடாது. இன்ப துன்பங்களைத் தோற்றுவிப்பதும் நீங்கள், அதினின்று விடுதலை காணவேண்டியவர்களும் நீங்களே. எனவே என்றும் காளிங்கன் மேல் நடனமாடும் ஸ்ரீ கிருஷ்ணன் அட்டபுயங்கம் என்னும் திவ்விய தேசத்தில் கோயில் கொண்டிருக்கிறான். அவனுடைய

முருகவே. பரமநாதன்

மலரடிகளே சரணம் என்று தஞ்சம் கொடுங்கள். உங்களை அவனுடைய திருவடிக்காளாய் விட்டால் என்ன குறையுமில்லை. அப்பொழுது நீங்கள் இளங்கன்றுகள் போல் துள்ளிக்குதித்து மகிழ்ச்சி பொங்க வாழலாம் என்று இடித்துச்சொல்கிறார். எனவே துன்பமே நீ தூர நில் என்று நாம் சிரிப்போமாயின் வாழ்வு செழிப்புடனமையுமன்றே. எண்தோள்வீசிநின்றாடும் திருக்கோலம் காரைக்காலில் இருக்கிறது. இது சிவனுடையது. இதைபோன்று எட்டுப்புஜங்களுடைய திருமால் கோயில் கொண்டதலம் அட்டபுயம். [அட்டபுஜம் - அட்டபுயம்]

இந்த அடிச்சுவட்டிலே சென்ற பாரதியாரும் துன்பங்களைக் கண்டுதுவளாதீர்கள் சென்றது இனி மீளாது. சென்றதையே சிந்தை செய்து

(8-ம் பக்கம் பார்க்க)

## எமது சிறுகதை

# முடிவுகள் முடிவானபோது...

★ பாமா இதயகுமார் ★

செல்வம் கடிகாரத்தை மீண்டும் ஒரு முறை பார்த்துக் கொண்டான். நேரம் பத்து மணியை அண்மித்துக் கொண்டிருந்தது இன்னும் 30நிமிடங்களில் கவிதா இந்த நாட்டை விட்டே போய்விடப்போகிறாள், அதுவும் நிரந்தரமாக. அவனால் அவள் நினைவுகளில் இருந்து தன்னை மீட்டுக் கொள்ள முடியவில்லை. அவள் என்ன குற்றம் செய்தாள்? செல்வத்தின் கண்களில் நேற்று மாலை கவிதா சந்தித்த போது சொன்னவை அப்படியே இதயத்தில் பதிந்து போய் இருந்தது.

''நடந்தது எல்லாம் போகட்டும். நாளைக் காலை பத்தரை மணிக்குபிளேட் என்னைக் கடைசியாகப் பயணம் அனுப்பவும் வரமாட்டீங்களா? - கவிதா கெஞ்சுவது போலக்கேட்டாள்''.

''நாளைக்கு வினோவுக்கு ஒரு பேர்த் டே பாட்டி இருக்கு டைம் கிடைச்சால் வாறன்''. செல்வம் சொன்ன தொனியிலிருந்தே அவன் பொய் சொல்கின்றான் என்பது புரிந்தது அவளுக்கு, அவனோடு வாழ்ந்தவள் அல்லவா அவள்.

''ஏன் செல்வம் என்னில் அப்பிடி என்ன ஆத்திரம்? என்னைக்கடைசியாகப் பயணம் அனுப்பக்கூட வரக்கூடாதா'' கவிதா அழுதுவிட்டாள்.

''கவிதா, தயவு செய்து என்னைக் குழப்பாதீர். நான்...'' - செல்வம் ஏதோ சொல்ல நினைத்தான். ஆனால் முடிக்கவில்லை அவனுக்குத் தொண்டைக்குள் ஏதோ அடைத்து கொண்டது போல இருந்தது.

''செல்வம்' நான் உங்களுக்குப் பத்து வருஷங்களாகச் சட்ட பூர்வமாகவும் மனப் பூர்வமாகவும் மனைவியாக வாழ்ந்திருக்கிறன். அதுக்கு முதல் ஐந்து வருஷம் காதலியாக இருந்திருக்கிறன். ஆனால் இப்ப.'' - கவிதாவால் தொடர்ந்து பேசமுடியவில்லை. இப்போது தான செல்வத்தின் மனைவியில்லை என்பதை ஏனோ அவளால் சொல்ல முடியவில்லை.

''இப்ப நீர் விவாகரத்து எடுத்திட்டீர். நீர் என்ர மனைவிஇல்லை'- செல்வம் அதை மட்டும் நிதானமாகச் சொன்னான்.

''அப்படியெண்டால் கடைசி ஒரு நண்பனாகக் கூட ஏயாப்போட்டுக்கு வரமாட்டீங்கள், அப்பிடித்தானே''- கவிதா வேதனையோடு கேட்டாள்.

''நான் வருவன், ஆனால் வினோவுடன் ஒரு புரோக்கிராம் - செல்வம் இழுத்தான்.

''ஐயாம் சொறி செல்வம்''- கவிதா திரும்பிப்பாராமல் பொங்கி வந்த கண்ணீரை அழுத்தித்துடைத்தபடி நடந்தாள்.

செல்வமும் கவிதாவும் காதலித்துத்தான் திருமணம் செய்து கொண்டார்கள். வசதியான குடும்பதில் பிறந்த கவிதா செல்வத்தைத் திருமணம் செய்வதற்காக எத்தனையோ எதிர்ப்புக்களையும் போராட்டங்களையும் எதிர்த்துப் போராடியிருக்கிறாள். அந்தப் போராட்டின் முடிவு கவிதா நிரந்தரமாகவே செல்வத்திடம் தஞ்சம் அடைந்தாள். பெற்றவர் சகோதரங்கள் அனைவரையும் துறந்து காதலித்தவனை மணம்செய்வது என்றுசெல்வத்தோடு இல்லறம் புகுந்தாள்.

செல்வத்தின் மனம் அலை போல ஆடி அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தது. கவிதா அவன் மனமறிய, மனம்நோக ஒரு நாளேனும் நடந்திருக்க மாட்டாள். ஆனால் செல்வத்துக்குத்தான் ஆத்திரமும் அவசர புத்தியும்.

''இந்த வீட்டில ஒண்டு வைச்சால் வைச்ச இடத்தில எடுக்க ஏலாது'' — செல்வம் ஆத்திரத்தால் கத்தும்போது, மெதுவாகச் சிரித்துக்கொண்டு நிற்பாள் அவள். ஆத்திரத்துடன் கவிதாவின் பக்கம் திரும்புவான் அவன். நிமிடத்தில் கோபம் மாறிவிடும். இது அவன் அறியாதது அல்ல. அவன் தேவைக்கும் ஆசைக்கும் வாழ்ந்தவள் இன்று...''

செல்வத்துக்கு குழந்தை மனம். குழந்தைகளைக் கண்டால் குழந்தையோடு குழந்தையாகும் இயல்பு அவனோடு சேர்ந்து கவிதாவும் குழந்தையாகிவிடுவாள். செல்வத்தின் சகல விருப்பங்களையும் நிறைவேற்ற முடிந்த கவிதாவினால் ஏனோ செல்வத்தின் ஏன் தனதும் ஆசையான குழந்தை மட்டும் பெற்றெடுக்க முடியாமல் போய்விட்டது.

''செல்வம், இந்த எட்டு வருஷ காலத்தில் பிறக்காத குழந்தைஇனிப்பிறக்கும்எண்டு எப்பிடிஎதிர்பார்க்கிறது. ஆனபடியால்...'' — கவிதா சொல்லி முடிக்கவில்லை. செல்வம் நிதானமாகக் கவிதாவை நிமிர்ந்து பார்த்தான். அவனது பார்வையின் தீட்சணயம் தாங்க முடியாமல் கவிதா நிலத்தை நோக்கினாள்.

''கவிதா, எனக்கு ஒரு குழந்தை பிறந்தாலே தவிர ஒருநாளும் இன்னொரு குழந்தையை தத்தெடுக்க மாட்டன்''— அவன் குரலில் உறுதியிருந்தது.

''செல்வம், யார் பெற்றால் என்ன குழந்தை, குழந்தை தானே எங்கட ஆசை ஒரு குழந்தை இந்த வீட்டில தவழ வேணும் அதுதானே?'' - கவிதாவின அடிமனதில் இருந்த ஆசையும் இதுதான். தன்னால் ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க முடியாமல் போனால்கூட பரவாயில்லை, ஒரு குழந்தையைத் தத்தெடுத்து என்றாலும் தன் ஏக்கத்தை தீர்க்க விரும்பினாள் அவள்.

''கவிதா, என்ர ஆசைக்கும் உம்மட ஆசைக்குமாக ஒரு குழந்தையைத் தத்தெடுக்க நினைக்கலாம். ஆனால் அந்தக் குழந்தையை இந்தச் சமுதாயம்சும்மாவிடுமா? வளப்பிணி, அநாதை எண்டு சொல்லியே கொன்றுபோடும். எங்களுக்குக் குழந்தை இல்லை எண்ட வேதனையைவிடஇதுகொடுமை இல்லையா?''— செல்வம் உறுதியாகவும் முடிவாகவும் சொன்னபோது கவிதா தவித்துப் போனாள்.

மீண்டும் செல்வமே தொடர்ந்தான். 'கடைசி முறையாக எங்களை வைத்திய பரிசோதனைக்கு வரச்சொல்லியிருக்கிறான் யாரோ ஸ்பெலிஸ்ட் வந்திருக்கிறாராம். நாளைக்கு ஆஸ்பத்திரிக்குப் போகவேணும்'' —செல்வத்தின் இவ்வார்த்தைகள் கவிதாவுக்கு ஏனோ இதமாக இருந்தது.

''என்ன செல்வம் யோசிக்கிறீங்கள், டொக்டர் சொன்னதைப் பற்றியா?'' - கவிதாவே கேட்டாள் ஒரு குழந்தைபோல.

''கவிதா, இந்த ஜன்மத்தில் எங்களுக்குக் குழந்தையே இல்லையா?'' - செல்வம் கேட்டுவிட்டுக் குழந்தைபோல அழுத போது கவிதா திகைத்துப் போனாள்.

வைத்திய பரிசோதனையின் போது ராம் சொன்ன முடிவின்படி செல்வத்தில் எந்தக் குறைபாடும் இல்லை. கவிதாவின் கருப்பையில்தான் கரு தங்குவதற்குச் சாத்தியமில்லை என்று ராம் சொன்னான் செல்வத்தின் ஆருயிர் நண்பனே சொன்னான் இதனால் கவிதாவைக் காட்டிலும் உடைந்து போனது செல்வத்தின் மனம் தான். ஆனால் கவிதா தனக்குள் ஊமையாகக் குமுறினாள். ஆனால் செல்வம் எரிமலையாக வெடிக்கத் தொடங்கிய போது..

கவிதா, செல்வத்தின் இதயம் நோகும்வண்ணம் நடக்கவில்லைத்தா . ஆனால் அவனது இதயம் தான் விரும்பியதை அடையவேண்டும் என்று அலை பாய்ந்து கொண்டிருப்பதை அவனால் தடுக்கமுடியவில்லை. அதன் முடிவு செல்வம் தன்னுடன் கடமைபுரியும் வினோவுடன் நெருங்கிப்பழக ஆரம்பித்தான்.

''செல்வம் இண்டைக்கு உங்களைப் பற்றி ஒரு வதந்தி கேள்விப்பட்டன். எனக்கு ஒரே சிரிப்பாக இருக்கு''— கவிதா சிரிப்பின் ஊடாக சொன்னாள். 'என்ன என்பது போல், செல்வம் அவளை நோக்கினான்.

''செல்வம், உங்களுக்கும் ஒரு கேளுக்கும் .. அதுவும் இப்ப...''

''இதில சிரிக்க என்ன இருக்கு?

செல்வம் திருப்பிக் கேட்ட போது அதிர்ந்து போனாள் கவிதா.

''செல்வம் நீங்கள் என்ன சொல்லுறீங்கள்?''

''நான்உம்மைக் காதலிச்சுக் கல்யாணம் கட்டினது உண்மை கவிதா. ஆனால் உம்மட்டைக் கிடைக்காத ஒன்றை நான் இன்னொரு இடத்தில எதிர்பார்க்கிறது எப்படித் தவறாகும். உமக்குத்தான் இனி குழந்தை பிறக்காது எண்டு ராம் சொல்லிப் போட்டான். அதுக்குப் பிறகும் என்ரஆசை மண்ணாகப் போவதை நான் விரும்பவில்லை. அதனால் வினோவை...

கவிதாவுக்கு எல்லாம் புரிந்தது. செல்வத்துக்கு கவிதாவின் முகத்தை நேருக்குநேர் நிமிர்ந்துபார்க்க முடியவில்லை. அவனால் அவளை வெறுக்கவும் முடியவில்லை.குழந்தை ஒன்றை அவன் விரும்பினான் என்பது உண்மை ஆனால் அதற்காக அவன் கவிதாவை வெறுக்கவில்லைத்தான். ஆனாலும் கவிதாவின் இதயம் உடைந்து சிதறிப்போனது அவனுக்குப் புரிந்தது

பலமுறை கவிதாவின் முகத்தைப பார்த்துத் தன் ஆசையையும் ஏக்கத்தையும் விளக்கி அவளிடம் மன்னிப்புக் கோர செல்வத்தின் இதயம் தவியாய்த் தவித்தது அதேவேளை அவளிடம் வினோவை மறுமணம் செய்வதற்கான சம்மதத்தையும் பெற நினைத்தான். ஆனால் கவிதா அழவுமில்லை. ஆரவாரப்படுத்தவுமில்லை திடீரென அவளுக்குள் ஒரு நீண்ட மௌனம் நிலையாய்க் குடிகொண்டு விட்டதை செல்வம் புரிந்து கொண்டான். அவளிடம் இருந்தகலகலப்பு இருந்த இடம் தெரியாமல் மறைந்து கொண்டது. அன்று செல்வம் எதிர்பாராத போது ''செல்வம், உங்கட விருப்பமும் ஆசையும் நிறைவேறவேணும். அதுதான் என்ர விருப்பமும் ஆசையும். நீங்கள் வினோவை மறுமணம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்திட்டன்'' என்ற கவிதாவை இடைநிறுத்தினான் செல்வம்.

''கவிதா, நீர் என்ன சொல்லுறீர்'' - செல்வம் தடுமாறினான்.

''செல்வம், வினோவை நீங்க கல்யாணம்செய்யவேணும் என்ற உங்கட விருப்பத்தை நான் தடுக்கமாட்டன்'' என்றவள் பின் எதுவுமே பேசவில்லை. செல்வத்தினால் கவிதாவின் முடிவை நம்பவே முடியவில்லை. அவன் அறிந்த அளவில் கவிதா அவனே உலகம் என்றுவாழ்ந்தவள். அவன் கண்ணில் தூசு விழுந்தால் தன் கண்ணே போய் விட்டது போலத் துடிக்கும் சுபாவம் கொண்டவள். ஆனால் இன்று ஆர்ப்பாட்டமோ, அழுகையோ, வெறுப்போ காட்டாமல் அவள் பிரிந்ததைத் தான் அவனால் ஜீரணிக்க முடியவில்லை. அவளும் சாதாரண பெண்ணாக அழுது குளறி இருந்தால் அவன் பொறுத்திருப்பான்.

''ஐயா, ஐயா'' - வாசல்பக்கம் குரல் கேட்டு நிமிர்ந்தான் செல்வம்.

''கவிதா அம்மா இந்தக் கடிதத்தைக் கொடுக்க சொன்னாங்க'' எனக் கார் ட்ரைவர் சுப்பையா கொடுத்த கடிதத்தை அவசரமாக வாங்கிய செல்வம் ''நீ எங்கே கவிதா அம்மாவைக்கண்டாய்'' எனக் கேட்டான்.

''என் கார்ல தாங்க ஐயா ஏயாப் போட்டுக்குப் போனாங்க'' என்ற சுப்பையா நடக்கத் தொடங்கினான்.

அவசரமாகக் கடிதத்தைப் படித்தான் செல்வம்.

''என்றும் அன்புக்குரிய செல்வம்

''நீங்கள் என்னை இறுதியாகப் பயணம் அனுப்ப வருவீர்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் நீங்கள் வரவில்லை. நான் இந்நாட்டை விட்டுப் போவதற்குள் உங்களிடம் ஓர் உண்மையைச் சொல்ல வேண்டும். அதனால் அவசரத்தில் எழுதுகிறேன்.

'எனக்கு வந்த இந்தமுடிவு வினோவுக்கும் வரக்கூடாது. குழந்தை இல்லை என்பதற்காக

(8-ம் பக்கம் பார்க்க)

# வரதட்சணையை எதிர்த்து இப்படி ஒரு போராட்டம்

இந்தியாவைச் சுற்றி ஓட்டமும் நடையுமாக வந்து கொண்டிருக்கிறார் ஹரிஹர சாத்செட்டி வயது 25. டெல்லியைச் சேர்ந்தவர். இரண்டரை வருஷங்களாகத் தொடர்ந்து ஓடிக்கொண்டே இருக்கிறார். எதற்கு! அது ஒரு கதை. சோகமான உண்மைக்கதை.

''டெல்லியிலுள்ளஎன் உறவுக்காரர் வீட்டில் தங்கிக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தேன். இரண்டு வீடு தள்ளி வசித்து வந்தாள் ஒரு பெண். இருபத்தொரு வயது அழகி. கல்யாணத்தின் போது அவள் வீட்டார் 60000 ரூபாய் வரதட்சணை கொடுத்தார்கள். கல்யாணமாகி கணவன் வீட்டுக்கு வந்தபின்பும் அதைக் கொண்டுவா இதைக்கொண்டுவா என்று துன்புறுத்தினார்கள். ஸ்கூட்டர் கேட்டார்கள். இவர்களால் வாங்கித்தர முடியவில்லை. வழக்கப்படியே ஸ்டவ் வெடித்தது என்றார்கள். நினைவிழந்த அந்தப் பெண்ணை ஆஸ்பத்திரிக்குப் கொண்டுபோனோம். டாக்டர்களால் பிழைக்க வைக்க முடியவில்லை! சாகும்போது உண்மையைச் சொல்லிவிட்டாள். அப்போது என் மனசில் தோன்றின வெறி,நான் என்னை இப்படி ஓட்டமும் நடையுமாக இந்தியாவைச் சுற்றி வந்து வரதட்சணைக்கு எதிரானதொரு பிரசாரப் பணியை நடத்தச் செய்தது'' என்றார் ரெட்டி.

முன்பெல்லாம் தினமும் ஐம்பது அறுபது கி. மீ தூரம் நடப்பாராம். ஆனால் வெகு தூரம் ஓடியதில் கிட்னிப்ராப்ளம் ஏற்படவே இருபத்தைந்து முப்பது கி. மீக்கு மேல் நடக்க வேண்டாம் என்று டாக்டர் அட்வைஸ் செய்துள்ளாராம்.

இதுவரை பல்வேறு மாநிலங்களில் சுமார் 22000 கி. மீ. ஓடியிருக்கிறார். இந்தப் பயணத்தில் இப்போது இவர் உபயோகிக்கிற ஷூக்கள் 28வது ஜோடி. டிராக் ஸூட் 7-வது. முதுகில் மாட்டிக் கொள்கிற பை 15வது. டெல்லியிலிருந்து புறப்படுகையில் இவரது எடை 63 கிலோ. சென்னையில் 53 கிலோ ஸ்டிரிக்கட்.வெஜிடேரியன்.கையில் தேசியக்கொடியைப் பிடித்துக் கொண்டு ஓடுகிறார்.

இவரது பயணத்தில் சுமார் 800 கல்லூரிகளிலும் மற்றும் பல இடங்களிலும் இளைஞர்களைக் சந்தித்து வரதட்சணைக் கொடுமைகள் பற்றி விளக்கிப் பேசி இருக்கிறார். ஏறத்தாழ 30000 பேர்கள் பற்றி இவரிடம் வரதட்சணை வாங்காமலும் கொடுக்காமலும் திருமணம் செய்து கொள்வதாய் உறுதிமொழி கொடுத்துள்ளனர். வரதட்சணை இல்லாமல் பதினொரு திருமணங்களையும் நடத்தி வைத்திருக்கிறார்.

இன்னும் இவர் பயணம் செய்யாத மாநிலங்களான அந்தமான், கேரளா, லட்சத் தீவுகள், மகாராஷ்டிரா, கோவா,குஜராத்,ராஜஸ்தான் இங்கெல்லாம்போய்விட்டு 87ல் மறுபடியும் டெல்லிக்கு போய்ச் சேர்வாராம் ஓடுபவர் உலகத்திலேயே இவர் ஒருவராகத் தான் இருக்க முடியும்.

பஞ்சாப்பில் ஓடிக் கொண்டே இருந்தபோது தீவிரவாதிகளிடம் சிக்கிக் கொண்டேன். என்னைப்பற்றியும் எந்நோக்கத்தைப் பற்றியும் சொல்லி முடிந்ததும் நீயும் எங்களைப்போல ஒரு புரட்சிக்காரன்தான். நீயும் எங்களைப்போல ஒரு துப்பாக்கி வைத்துக்கொண்டு வரதட்சணைவாங்குபவர்களைச் சுட்டுப் பொசுக்க வேண்டும் என்று கூறி முதகில் தட்டிக் கொடுத்ததுடன் டீ, பிஸ்கட் எல்லாம் கொடுத்துஅனுப்பினார்கள் என்கிறார்.

ஷெட்டியின் வேறு சில ரசமான அனுபவங்கள்:

காஷ்மீரில் பலர்என்னை ''இந்தியாவிலிருந்தா வருகிறாய்'' என்று அந்நிய நாட்டவரைக் கேட்பது போல் கேட்டது என்னை ஆச்சரிப்படுத்தியது.

உத்தரப்பிரதேசத்தில் என்னை ஏழு திருடர்கள் வழிமறித்தனர் நான் என்னைப் பற்றிய எல்லா விவரங்களையும் சொல்லியதும் என்னிடமிருந்து பறித்தவற்றைத் திருப்பித் கொடுத்ததோடு அவர்களாகவே ஆளுக்குக் கொஞ்சம் பணம் போட்டு

(11ம் பக்கம் பார்க்க)

## புதிய புத்தகம்

டானியலின்

# "அடிமைகள்"

"இந்த நாவலில் குறிப்பிட்டிருக்கும் கால இடைவெளிக்குள் தொடர்ச்சியாக பஞ்சம மக்கள் எந்தெந்த விதங்களில் வஞ்சிக்கப்பட்டார்கள். அடிமைகளாக்கப்பட்டார்கள் என்பதையும், அந்த வஞ்சிப்புக்களுக்கு எதிராக இந்த மக்கள் ஆங்காங்கே எப்படிப்பட்ட விதங்களில் நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள் என்பதனையும் கிராமப்புறங்களில் எவ்வளவு நுணுக்கமாக இவர்கள் மேல் அடக்குமுறை நுகத்தடிகள் சுமத்திவைக்கப்பட்டன என்பதினையும் நீங்கள் காண்பதற்காக எனது அனுபவத்திற்கும், எனக்கு முற்பட்டவர்களின் அனுபவங்களுக்கூடாக நான் கற்றுக்கொண்டமைக்கு உள்ளும் நிதானமாக காலூன்றி நின்று அந்தக் கால இடைவெளியில் வாழ்ந்தவர்களையே பாத்திரங்களாகவும், அவர்கள்வாழ்க்கைக்குள் வந்து போனவைகளையே கருப்பொருளாகவும் தந்திருக்கிறன்."

இது நாவலாசிரியரின் கூற்றிலிருந்து கிடைக்கும் சொற்றொடர்களாகும். இதை வைத்துக்கொண்டு பார்க்குமிடத்து இந்த அடிமைகள் நாவலுக்குள் நாம் பார்ப்பவை, கேட்பவை, அறிபவை யாவும் நமது தமிழ்ப் பிரதேசத்திற்கு இடையிலான உண்மைகளாகும் என்பது தெட்டத் தெளிவாகின்றது. இதை நாம் நம்பும் பட்சத்தில் மிகப் பெரும் விரிவடைந்த கறுப்பு மக்களிடையே நடந்ததாக கூறப்பட்டவைகளால் உண்மைகளைப் பற்றி அறிந்ததை நாம் நம்பித்தான் ஆகவேண்டும்.

ஆசிரியர் தமது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளதுபோல ஒரு கால எல்லைக்குள் வாழ்ந்ததாக நாம் காற்று வாக்கில் அறிந்த மனிதர்களையும், அக்காலகட்டங்களுக்குள் நடந்தவைகளாக பல வாய் மொழிகள் மூலம் நாம் அறிந்துகொண்ட சம்பவங்களையும், அக்காலகட்டத்துள் இருந்ததாக ஓரளவுக்கு உணரப்படும் உணவு, உடை, நடைமுறை பாவனை, தேசவழமை, சட்டதிட்டங்கள் ஆகியவைகளில் எல்லாம் போகாமல் இந்த அடிமைகளுக்குள் உள்ளடக்கப்பட்டிருப்பது இந்த நாவலுக்குள் உள்ள சிறப்பு இயல்புகளில் ஒன்றாகும். இவற்றோடு நாவலுக்கான கருப்பொருளை வெளிக்கொண்டுவரும் கதை இளையோடி இளையோடி முடிவு வரை வந்து விடுவதும் போற்றத்தக்கவுரிய அம்சங்களில் ஒன்றாகும்.

ஒரு கதை நடந்ததாகச் சித்திரிக்கப்படும் காலம் கதைகளோடு சேர்ந்து இளையோடி இளையோடி வரமுடியாமல் இடைநடுவே நின்றுபோய் விடுவதையே நமது தமிழ் நாவல்களில் பெருமளவு நாம் காண்கிறோம். ஆனால் அடிமைகளில்லா இத்தன்மையைக் கண்டுவிடமுடியாதென்பது உறுதி.

புத்தூர் நிலாவரைப் பகுதியில் பிறந்த கந்தன் என்ற பிரதான பாத்திரத்தில் அங்கு வாழ்ந்த அந்த குறுகிய காலத்துக்குள் புத்தூர் மண் மணக்கத் தவறவில்லை. புத்தூரை விட்டு அவன் மந்துவிலுக்கு வந்தபோது அவனிடம் மந்துவில் மண் வாசனை பிறக்கிறது. பின்னர் மந்துவிலையே சுற்றிச் சுற்றி அங்கையேதனது வாழ்க்கையை நடத்தி அங்கேயே சாகடிக்கப்படும் அவனிடம் கடைசிவரை மந்துவில்வாசனை மாறவில்லை. மந்துவில் கிராம வாழ்வுக்கமையவே அவன் தன்னை மயப்படுத்துவதென்பது ஒரு புனிதமானதொன்றாகும்.

யாழ்ப்பாணத்திற்குப் புகை வண்டி வந்தகாலம் இன்றைய பரம்பரைக்குத் தெரிந்திருக்க முடியாது. இந்த புகைவண்டி வந்த காலத்தையும் அந்தப் புகைவண்டியின் வரவிற்கு யாழ்ப்பாணத் தமிழர்கள் எதிர்ப்புத் தெரிவித்து, கல்லெறிந்து தடுக்க முற்பட்ட காலத்தையும் அதற்கான காரண காரியங்களையும் ஆதாரங்களுடன் ஆசிரியர் விளக்கிவைக்கிறார். அந்தப் புகை வண்டியிற்கு எதிர்ப்புத் தெரிவித்ததில் தலைமை தாங்கிய குதிரை கோஜ் வண்டிக் கம்பெனி இருந்த காரியாலயம்தான் ஆனைப்பந்திச் சந்தி வைத்திய மனையாக இன்று இருக்கிறது என்பதை இன்று யாருக்கும் சொன்னால் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

சேவல் சண்டை, தேங்காயடிப்பு ஆகிய இரு தேசிய விளையாட்டுக்கள் ஒருகாலத்தில் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்து வந்திருக்கிறது. இந்த இரு விளையாட்டுக்களின் நுணுக்கங்களையெல்லாம் அக்குவேறு ஆணி வேறாக இலகுவானமுறையில் விளக்கப்பட்டிருப்பதை அடிமைகளை நீங்கள் படிக்கும் போது ஆச்சரியப்பட்டுவிடுவீர்கள்.

யாழ் பிரதேசத்தை ஆதிக்கம் செய்துவந்த மனிதர்கள் அவர்களிடையே உள்ளுக்குள்ளாக அடிமைகளைக் கட்டிஆள்வதில் முரண்பாடுகள். அந்த முரண்பாடு காரணமாக அல்லோலகல்லோல வாழ்க்கைக்கு உட்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள் இடையிடையே தன்னிச்சையான இவர்களுக்குண்டான போர்க்குணங்கள் இந்த போர்க்குணங்களின் பிரதிபலிப்புகள் ஆகியவைகள் யாவும் ஒவ்வொரு சம்பவங்களுடன் இணைக்கப்பட்டு நாவல் வளரும் நிலை இவரது மற்றைய நாவல்களையும் விட மிகவும் வேறுபட்டதாகவே இருக்கிறது.

புத்தூரில் ஆதிக்கக்காரன் பல்லக்கு முதலியாருக்கும் மந்துவில் பெரிய மனிதர் கைலாயபிள்ளையாருக்கும் இடையே குடும்ப சம்பந்தமான தகராறு நடக்கிறது. இந்தத் தகராறில் நீயா நானா என்பதைப் பார்த்துவிடுவதற்காக பண்டித்தலைச்சி அம்மன் கோவிலை இரத்தக் களரியாக்கி குறிப்பிடப்பட்டாய்விட்டது. இந்தப் போர் சித்திரிக்கப்பட்டிருக்கும்முறை கைலாயர்பின் வாங்கிப்போக பல்லக்கு முதலியார் கோவில்காணியில் ஆட்சி எடுத்தமுறை மிகவும் அற்புதமாகக் சித்திரிக்கப்படுகிறது. ஆனால் வேறோர் சந்தர்ப்பத்தில் அந்தக் கோவிலின் சட்டதிட்டங்களை மீறி தாழ்த்தப்பட்டவர்கள் உள்நுழையஎடுத்துக்கொண்ட நடவடிக்கையை நசுக்குவதற்கு இந்த இருவருமே கைகோத்துக் கொண்டு கொலைகளைச்செய்து பிரச்னையைத் தீர்த்துக்கொண்டதும் அன்றைய நடைமுறைகளோடு ஒட்டிய இயல்பாக அமைந்துவிடுகிறது.

இந்த நாவலில் வரும் ஒவ்வொரு பாத்திரங்களும் மிகவும் கவனமாக வழிநடத்தப்பட்டிருக்கின்றன. தத்தம் இயல்புக்கு மாறாக எந்தப் பாத்திரங்களும் நடந்துகொள்வதாக துளியளவும் குறைகூறிவிடமுடியாது.

குறிப்பிடக்கூடிய அந்தக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுவந்த சம்பிரதாயங்கள் யாவும் பிசகின்றி எழுத்தேற்றப்பட்டிருக்கிறது. இன்னும் நுணுக்கமாகப் பார்த்தால் அக்காலத்து உணவுகூட கூர்ந்து கவனிக்கப்படக்கூடிய அளவிற்கு சொல்லப்பட்டிருக்கிறது.

ஒரு படைப்பிலக்கியத்தைப் படிக்கும்போது அந்தக் கதை நிகழ்ந்ததிற்கான காலமும், அந்தக்காலத்து பாத்திர மாந்தர்களும் அந்தக்கால வாழ்க்கைமுறையும் மனதுக்குள் வரவில்லையெனில் அதை ஒரு சிருஷ்டி என்று சொல்லிவிடுதல் தகுந்ததாகாது. அதே வேளை சிருட்டிப்பு நடந்ததாகக் குறிப்பிடப்படும் காலகட்டத்தைத் தாண்டி சற்று முன்னே வந்து, வரவிருக்கும் வாழ்க்கைமுறைக்குக் கட்டியம் கூறும் தன்மையும் இடம் பெறும்போதுதான் அது காலத்தை வென்றும் எதிர்காலத்தைக் குறிகாட்டி நிற்கும் படைப்பிலக்கியமாகும்

இதற்கு முன் டானியல் அவர்களுடைய சிருஷ்டிகள் பலவற்றை நான் படித்திருக்கிறேன். அவைகளில் குறிப்பாக பஞ்சமரைப் பல தடவைகள் படித்திருக்கிறேன் அந்தப் பஞ்சமரில் ஒரு பிரதேசத்தினுடைய ஒரு பகுதி மக்களின் முழுவரலாறும் சித்தரிக்கப்பட்டிருந்தாலும் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தை அல்லது குறிப்பிட்ட ஒரு விஷத்தை அது உள்ளடக்கி நிற்கவில்லை. மொத்தத்தில் ஒரு சமுதாயத்தில் வெற்றி தோல்வியினையும் வளர்ச்சிகளையும் அதற்கு உட்பட்ட சகல விவகாரங்களையும் உள்ளடக்கியிருக்கின்றதனால் ஒரு சமுதாய பேரெழிச்சி என்ற வரம்புக்குள் தான் அடக்கிப் பார்த்தேன் ஒருகுறிப்பிட்ட பிரதேச நிலப்பரப்புக்கள் நிகழ்ந்து (முடிந்தது விட்ட சம்பவங்களை சரித்திர நோக்கோடு தான் அந்தப் பஞ்சமர் அமைந்ததெனக் கூறலாம். ஆனால் அடிமைகளோ அப்படிப்பட்டதான அமைவுக்குச் சற்று விலகி ஓர் குறிப்பிட்ட சமூக மாறுதல் நிகழ்வுகளை மட்டும் உள்ளடக்கி மாறிவரும் இந்த சமூக அமைப்புக்கள் பீறிட்டெழும் மனித நியமங்களையும் நிற்பது பிரத்தியோகமான ஒரு வளர்ச்சி என்றே துணிந்து கூறலாம்.

அடிமைகள-ஒரு தோழமை வெளியீடு.

அட்டைப் படம் - இலங்கை றேமா

இலங்கை விற்பனை உரிமை; பூபாலசிங்கம் புத்தக நிறுவனம்.

இலங்கையிலை: ரூபா 75.

— திருலோகம்

---

# இவ்வாரம் எப்படி?

### மேடம்

குடும்பத்தில் சிறிய பூசல் தோன்றி மறையும். மனதில் அமைதி குன்றும். விஷமிகள் புனைந்துரைகளால் ஆத்திரம் அதிகரிக்கும். அதிகாரப் போதையில் தவறுகள் நடக்கும். வீணுக விரோதத்தைச் சம்பாதிக்க நேரும். அவசியம் பொறுமை வேண்டும்.

### இடபம்

இவ்வாரம் தொழிலில் நஷ்டமடையக்கூடும். இடப்பிரிவும் உண்டு. உடல் சுகாதாரம் வேண்டும். மனதில் அமைதி நிலைநிற்காது. திடீர் முடிவுகளைத் தவிர்த்துக் கொள்வது நன்று. இவ்வாரம் தெய்வ வழிபாடு விரும்பத்தக்கது.

### மிதுனம்

பிரச்னைகள் பல இவ்வாரம் நல்ல முடிவை அடையும், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும் பேச்சில் நிதானம் பெருமையைத் தேடித்தரும். பண முடக்கம் தீரும். இனபந்துக்களில் பரவசமான சூழ்நிலை தென்படும்,

### கடகம்

இவ்வாரம் முன்னேற்றமான காரியங்களில் எதிர்பாராத தடைகள் ஏற்படலாம். சகோதர வழியால் சஞ்சலத்திற்கிடமுண் . பூமிப் பிணக்குகளைத் தவிர்த்துக் கொள்ளவும். புதிய பணிகளில் தாமதம் தென்படும் ஆணவப் போக்கினல் ஆபத்துக்கள் எற்படலாம். அடக்கம் வேண்டும்.

### சிங்கம்

இவ்வாரம் தாய்வழித் தன வரவிற்கும் இடமுண்டு. குடும்பத்தில்திருப்திகரமானசூழ்நிலை தென்படும். கல்வித்துறையில் அதிக ஆர்வம் பிறக்கும். ஆசிரியர்கள் போற்றப்படுவார்கள். ஆராய்ச்சிகளில் அதிக ஆர்வம் ஏற்படும். கலைஞர்களுக்கு முன்னேற்றம் தென்படும்.

### கன்னி

கற்கண்டுபோல இனிக்கும் வாழ்க்கையில் காதல்விவகாரங்களுக்கும் இடமுண்டு. விவாக வழியின் மூலம் கனதனம் சேரக்கூடும். வெளியிடத் தொடர்புகள் பெருகும். இன சனங்களின் உதவியுடன் செல்வாக்கும் உயரும்.

### துலாம்

எண்ணியதில் தடைகள் தோன்றும். ஏமாற்றம் தாக்கும். நண்பர்கள் காலைவாரி விடக்கூடும். நிதானம் வேண்டும். வியாபாரிகளாயின் பங்காளிகளுடன் பகைத்துக் கொள்ளவேணடும் பொருட் செலவுமுண்டு திருப்தியற்ற வாரம்.

### விருச்சிகம்

இவ்வாரம் வாழ்க்கையில் தென்றல் வீசும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். இவ்வாரம் மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம்பெறும். நீண்ட நாள் பகை இன்று நிவர்த்தியாகும். காதலர்கள் வாழ்க்கையில் பிணைப்புகள் இறுகும்.

### தனுசு

இவ்வாரம் பணத்தைக் கொடுத்து பகையை சம்பாதித்துக் கொள்வீர்கள். தொழில்துறையில் சோர்வு தென்படும் நண்பர்கள் மூலம் புதிய தொல்லைகள் தோன்றக்கூடும். நிதானபுத்தியுடன் நடந்து கொள்வது நன்று. வணிகர்கள் வாழ்க்கையில் சோதனை நிறைந்தாக இருக்கும்.

### மகரம்

இவ்வாரம் வணிகர்களுக்கு வியாபார விருத்திக்கு இடமுண்டு. புதிய முயற்சிகள் கைகூடும். இரக்க சிந்தனை மேலிடும். பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். பெரிய இடத்துத்தொடர்புகள் ஏற்படுவதற்கு இடமுண்டு. கண்ணியமான வாரம்.

### கும்பம்

இவ்வாரம் செய்தொழில் சிறப்படைவதற்கு இடமுண்டு. புதிய கண்டு பிடிப்புகளும் இடம் பெறும் பொறியியலாளர்களுக்கு சிறப்பானதினம். சிலருக்கு அரசினர் வருதும் கிடைக்கலாம். தொடர்புகளாலும் திருப்தியுண்டு.

### மீனம்

இவ்வாரம் பொருளாதார நிலை சீரடையும். சிலருக்கு எதிர்பாராத வரவுக்கிடமுண்டு. நிதி நிலைமையில் விரும்பத்தக்க முன்னேற்றம் காணப்படும். வணிகர்களாயின் அதிக ஆதாயத்தைப் பெறுவர்,

திருமலை க.வே. ரவீந்திரன்

---

## இன்று

மாதம் — பங்குனி

திகதி - 3 [1986 - 03 - 16]

கிழமை - ஞாயிறு

திதி - ஷஷ்டி

பின் இரவு வரை

நக்ஷத்திரம் - கார்த்திகை

மு. இரவு வரை

---

## கன்று போல்...

(6 ம பக்கத தொடர்ச்சி)

கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்த குமையாதீர் இன்று புதிதாய்ப் பிறந்தோமென்னும் எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டுஉண்டு மகிழ்ந்துவிளையாடி வாழ்வீரென வீறிழந்த உள்ளத்துக்கு வீறு கொடுக்கிறார்.

---

# குறுநாவல்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தைக் கண்டார்? முரளி தனது உடமைகள், வேலை... சகலதையும் இழந்து என்னையடைந்து என்னத்தை எதிர்பார்க்கப் போகிறார். நாம் எல்லோருமாகவே எதை இழந்துகொண்டிருக்கிறோம்?

ஜானகியின் வீட்டிலிருந்து வந்த தந்தியும், முகுந்தனின் கடிதமும் முரளியின் கடிதமும் ஜானகியின் அறைக்கு வந்து சேர்ந்தபோது—

அந்த மூன்றிற்குப் பதிலாக-

''என்னைத் தேட வேண்டாம்'' என்ற ஜானகியின் கடிதம் காத்திருக்கிறது.

[நிறைந்தது]

---

# சிறுகதை

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

என்னையும்உங்களையும்டாக்டர் ராம் ஒரு ஸ்பெசலிஸ்டிட்டை கூட்டிப்போன போது பரிசோதனையின் பின் அவர் சொன்ன உண்மையை நான்தான் ராமிடம் சொல்லி மறைத்தேன். பரிசோதனையின் முடிவுப்படி எனது கருப்பையில் கரு தங்கும் வாய்ப்பு இல்லை என்று உங்களிடம் சொன்னது பொய். ஒருகுழந்தைக்கு அப்பா ஆகும் சக்தி உங்களுக்குத்தான் இல்லை என்று டொக்டர் என்னிடம் சொன்னபோது, அதைக்கேட்டால் நீங்கள் தாங்கமாட்டீர்கள் என்பதால் ஒரு பொய்யைச்சொல்லி விட்டேன். அது எனக்கே பாதகமாகிவிட்டது. எனக்கு வந்த கதி வினோவுக்கு வரக்கூடாது என்பதனுல்தான் இதை எழுதி விட்டுப்போகிறேன். இனியாவது ஒரு குழந்தையை எடுத்து வளர்ப்பீர்கள் என்று நம்புகிறேன்.

என்றும் பிரியமுள்ள
கவிதா'.

செல்வம் செய்வதறியாது சிலையாக நின்றான்.

'என்ன செல்வம் யோசனை' —வினோ கேட்டுக் கொண்டே வந்தாள்.

எதுவும் சொல்ல முடியாமல் செல்வம் வாயடைத்துப்போய் நின்றான்.

(யாவும் கற்பனை)

---

## எந்தப் பெரிய குருவி!

வாவா அக்கா விரைவாக
வாலில் புகையுது குருவிளடி!
எந்தப் பெரிய குருவிளடி!
இலங்கையில் இல்லாக் குருவிளடி!

முட்டை போடாக் குருவிளடி!
செட்டை அடியாக் குருவிளடி!
குஞ்சு பொரியாக் குருவிளடி!
குண்டைத் தானே இடுகுதெடி!

— சத்தியசீலன்

### தவக்காலம் 6-வது ஞாயிறு

# குற்றத்தை உணர்ந்து வருந்துபவன் மன்னிக்கப்படுவான்

"இறைவன் மன்னித்து வாழ்வளிக்கும் தந்தை" எவரும அவரது அணைப்பில்இருந்து பிரிந்து அழிவுற, விடவிரும்புவதில்லை அவனைத் தண்டிக்க வேண்டிய இடத்தில் தண்டித்து திருத்தி அவனது வாழ்வுக்கு வழிசமைத்துக் கொடுக்கின்றார்.

மனிதன் பலவீனமுள்ளவன். சந்தர்ப்பம் சூழ்நிலைகளால் தவறும் இயல்புடையவன். திட்டமிட்டு குற்றம் புரிவோரும் இருக்கின்றார்கள். ஆனால் தனது குற்றத்தை உணர்ந்து அக்குற்றத்திற்காக மனம் வருந்தி மன்னிப்பு கேட்கும் பொழுது அவனுக்கு அவை மன்னிக்கப்படும்.

சட்டங்களும் ஒழுங்குகளும் மனிதனை மனிதனாக வாழவைப்பதற்காகவே அன்றி அவனை அழிக்கவல்ல சட்டம் தெரிந்தோர் சட்டத்தின் படி வாழ்வோர் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பி விடுவார்கள். சட்டத்தை சட்டத்திற்காக வாழ்வோரும் இருக்கத்தான் செய்கிறார்கள். சட்டங்கள் ஒழுங்குகள் இருப்பது மனிதன் மனிதவாழ்வில் மேம்பட்டு வாழுவதற்காகவே தான் மாறாக அழிக்கவல்ல.

சட்டம் தெரிந்தவர்கள்சட்டத்தின் பேரில் குற்ற மற்றவனுக்கும் தண்டனை வழங்குகிறார்கள். சட்டங்களும் ஒழுங்குகளும் மனித வாழ்வை உயர் நிலைக்கு இட்டுச் செல்வதற்கு பதிலாக அவனை நசுக்குகின்றன. சட்டமும் ஒழுங்கும் நீதி, உண்மை, நேர்மை என்ற தூண்களிலே நிலைநின்றுசெயற்படவேண்டும். அப்பொழுது தான் குற்றத்தின் பிடியில் இருந்து அவனை திருத்தி நல்வாழ்வு வாழச்செய்யமுடியும்.

சமுதாயத்திலே உயர்ந்தவர்கள் வாழ்க்கையிலே மேம்பட்டவர்கள் வாழ்க்கையில் அடிமட்டத்திலே வாழ்பவர்களை சட்டம் என்ற கோல் கொண்டு அடக்கிஒடுக்கி ஆளமுற்படுகின்றார்கள். தமது கொள்கைக்கும் போக்கிற்கும் ஒத்து வராதவர்களை வாழ்க்கையில் கீழ் நிலைக்கு தள்ளிவிடுகிறார்கள். வேதனையின்விழிம்பிற்கு தள்ளுகின்றார்கள்

யேசுவும் தனது வாழ்க்கையில் குற்றம் புரிந்தவர்களை திருத்தி சமுதாயத்திலேஉயர்ந்த இடத்தில் வாழவைக்கின்றார். அவர்களைத் தண்டிக்கவில்லை. மாறாக புது வாழ்வு வாழ வழி வகுத்துக் கொடுத்தார்.

ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையில் மகிழ்ச்சியாக ஆசிப்பதைப் பெற்று வாழத்துடிக்கின்றான். அந்த ஆசைக்கு நாம்முட்டுக்கட்டையாகஅல்ல மாறாக குற்றம் புரியும் போது அவனைத் திருத்தி அவனது வாழ்க்கைக்கு உதவி புரிய வேண்டும். துணைக் கரங்களாக இருந்து அவர்கள் வாழ்விற்கு புதுப் பொலிவு அளிக்க வேண்டும்.

-- அருட்சகோ அற்புதராஜா

இந்த இகட்டான சூழ்நிலையில்
உங்கள் T. V யை திருத்துவதற்காக
கொழும்புக்கு கொண்டு போகவேண்டிய
அவசியமே இல்லை.

நெஷனல் T. V. றேடியோ றேடியோ கசற்

எதுவானாலும் தரம்குன்றாத நெஷனல் உதிரிப் பாகங்கள்கொண்டு திறமைமிக்க தொழில்நுட்ப வல்லுனரால் திருத்திக்கொடுக்கப்படும்.

நெஷனல் பிரதம விற்பனையாளர்:
V. K. இராசரத்தினம்
95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23447
A-335

## ஐவருக்கு மின் கம்பத் தண்டனை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தினைச் சேர்ந்த உறுகாமம்கிராமத்திலுள்ள கிச் துள்சந்தியில் ஆயுதப்படைகளுக்கு தகவல் கொடுத்த குற்றச்சாட்டின் பேரில் இருவருக்கு மின்கம்பத் தண்டனை வழங்கப்பட்ட அதே வேளையில் மாவடிவேம்பு கிராமத்தில் இதே குற்றச் சாட்டின் பேரில் இன்னொரு மின் கம்பத்தண்டனை வழங்கப்பட்டதாம்.

கொள்ளையடித்த குற்றத்துக்காக வாழைச்சேனையிலும்இருவருக்கு மின்கம்பத்தண்டனை வழங்கப்பட்டதாம்.

## மாதகலில் ரூ. 3 லட்சம் கொள்ளை

[பண்டத்தரிப்பு]

வீடொன்றுக்குள் ஆயுதபாணியாகச் சென்ற இனம் தெரியாத கோஷ்டியினர் சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்துச்சென்றுள்ளனர்.

மாதகலைச் சேர்ந்த யேசுரட்ணம் என்பவர் வீட்டில் நேற்று முன்தினம் இரவு இக் கொள்ளைச்சம்பவம் இடம் பெற்றது,

இக் கொள்ளைச் சம்பவத்தைக் கண்டித்து பண்டத்தரிப்புசந்தியில் நேற்றுக்காலை மறியல் போராட்டம் நடாத்தப் பட்டது. இதனால் மாதகல் பண்டத்தரிப்பு போக்குவரத்துச் சேவை தடைப்பட்டது.

கொள்ளை அடிக்கப்பட்ட பொருட்களை புனிதமான விடுதலை இயக்கங்களே மீட்டுத் தாருங்கள் என்னும் சுலோகமும் அங்கு காணப்பட்டது.

## பாவலவனும் பாநூலும்

9 - 3 - 86 வெளிவந்த 'ஈழநாடு' வாரமலர் 5ம் பக்கத்தில் இடம்பெற்ற 'தமிழறிந்த சின்னத்தம்பி' என்ற கட்டுரையை எழுதியவர் 'பாவலவன்' ஆவார். 'பாவலன்' என்றிருப்பது தவறு அக்கட்டுரையில் இடம் பெற்றுள்ள 'நூல் வெளியீடு' பா நூல் வெளியீடாகும். பாடநூல் அல்ல பேராசிரியர் அ சின்னத்தம்பி அவர்கள் பாநூலாசிரியருக்கு அவ் விழாவிலே பாவலவன் என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்.

யாழ். மக்களுக்கு
ஓர் நற்செய்தி
வெளிநாட்டுப் பயணத்திற்கான
விமான டிக்கட்டுகள், பாஸ்போட்,
விசா, பிரயாணிகள் காசோலைகள்
மற்றும் பிரயாணங்களுக்குத் தேவையான
சகல ஒழுங்குகளும் செய்துதரப்படும்.
தொடர்பு கொள்ளுங்கள்!
விஜயமாலா ரவல்ஸ்,
213, 215, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
தொலைபேசி: 547205
நேரில் தொடர்புகொள்ள முடியாதவர்கள்
யாழ்ப்பாணத்தில் தொடர்புகொள்ளவேண்டிய விலாசம்!
திருமதி சி. கஜமுகலிங்கம்,
ரஜனி நிலையம், ஊரியாட்டி, சுன்னாகம்.
9315




தேவை

யாழ். நகரிலுள்ள ஓர் நிறுவனத்திற்குக் கீழே குறிப்பிடும் பொருட்களைத் தொகையாகத் தொடர்ந்து வழங்குவதற்குத் தகுதியுடையோர் விண்ணப்பிக்கவும்:

வெண்நிற பனம் குருத்துச் சார்வு. வெண்நிற நீளமுள்ள பனம் ஈக்கு, நீளமான முதல்தரமான பனமட்டையின் நார், பச்சை பனம் மட்டை, பன்னாடை, ஒடியல், புழுக்கொடியல், பனாட்டு.

தொடர்ந்து வழங்கக்கூடியவர்கள் மட்டும் கீழே உள்ள விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்:

விளம்பர இல. C 1188,
C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.
(C 1188)

INSTITUTE OF TECHNICAL STUDIES
இந்தியா

மாணவிகளுக்கான விசேஷ வகுப்புக்கள்:
1. கம்பியூட்டர் பயிற்சி --12 மாதங்கள்
2. ரெலக்ஸ் பயிற்சி --3மாதங்கள்

மாணவர்களுக்கான விசேஷ வகுப்புக்கள்:
1. டிப்பிளோமா இன் எலக்ரோனிக்ஸ் --12மாதங்கள்
2. டிப்பிளோமா இன் சிவில் எஞ்ஜினியறிங் --12மாதங்கள்
3. டிப்பிளோமா இன் எலற்றிசியன் --6 மாதங்கள்

மேற்படி பயிற்சி வகுப்புகளில் சேர்ந்து இந்தியாவில் பயிற்சி பெறவிரும்பும் மாணவ மாணவிகள் விபரங்களுக்கு நேரில் வரவும்:

ஹரி ஹரன் என்ரபிறைஸ்
337, பலாலி வீதி,
(வளாகச் சந்தி அல்லது பரமேஸ்வராச் சந்தி)
யாழ்ப்பாணம். (C 1260)




விலை ரூபா 45/= க்கு மேல

- கேசச் சாயத்துறையில் ஒரு நூற்றாண்டு அநுபவம் வாய்ந்தவர்களால் தயாரிக்கப்படுகிறது.
- இன்று உலகம் முழுவதிலும், இலங்கையிலும் பெரும்பான்மையானோர் உபயோகிக்கும் ஒரே கேசச் சாயம்.
- சாயம் பூசியபின் எண்ணெய், சவர்க்காரம் ஷம்பு எதனையும் பயமின்றி உபயோகிக்கலாம்.
- உங்கள் கேசத்திற்குப் பொருத்தமான மூன்று வர்ணங்கள், ஷாம்பு வடிவமுட்பட.

உங்கள் கேசத்தினைப் பராமரிப்போர்
ஏக இறக்குமதியாளர்கள்:
ராதா டிரேடிங் கம்பெனி லிமிட்டெட்
25, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13. தொலைபேசி: 36860

# "வடக்கு - கிழக்கு ஒரே தமிழ்ப் பிரதேசம் என 'டொனமூர்' ஆணைக்குழுமுன் தெரிவிக்கப்பட்டிருந்தது!"

— கலாநிதி நீலன் திருச்செல்வம்

இலங்கை இனப்பிரச்னையை மிக ஆழமாக ஆராய வேண்டியது இக் காலகட்டத்தில் ஒரு தேவைப்பாடாக உள்ளது.

1929-ம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சியின் போது கண்டிய தேசிய சங்கம் [Kandyan National Association] மிகுந்த செல்வாக்கைப்பெற்ற ஒரு அமைப்பாக விளங்கியது.

இந்த அமைப்பு இலங்கையின் பிரதேச வேறுபாடுகளை அன்று மிகக்கச்சிதமாகப் பிரிவுபடுத்தியது. வடக்கு-கிழக்கு மாகாணங்கள் ஒருதனியான தமிழ்ப்பிரதேசமென்பதையும் கண்டிப் பிரதேசதிதைக் கொண்ட மத்தியபகுதி புறம்பானதெனவும், இவற்றிலிருந்து வேறுபட்ட மூன்ருவது பிரிவு கரையோர மாகாணம் எனவும் அச்சங்கம் பிரிவுபடுத்தியது.

## நீலனுடன் ஒரு பிரத்தியேகச் சந்திப்பு:

சந்தித்து எழுதியவர்: பா. அனந்தகிருஷ்ணன்

மேற்கண்டவாறு சட்டக் கலாநிதியும், முன்ஞள்வட்டுக் கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினருமான டாக்டர் நீலன் திருச்செல்வம் வழங்கிய பிரத்தியேக பேட்டியில் தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்னையில் பல்வேறுபட்ட சிக்கல்கள் நிறைந்திருப்பதாகத் தெரிவுக்கும் அவர், சட்ட நிர்வாக ரீதியில் இப்பிரச்னை குறித்து தமது விளக்கத்தை ஆரம்பித்தார்.

ஒரு சட்டத்துறைப்பிரமுகர் என்ற ரீதியில் இது பற்றி மேலும் என்ன கூறுகிறீர்கள்? என்றேன்.

### மூன்று பிரிவுகள்

இதற்கு அவர் பதிலளித்ததாவது: "1929-ம் ஆண்டு டொனமூர் ஆணைக்குழுமுன் கண்டியத்தேசியச்சங்கம் மேற்குறிப்பிட்ட நிர்வாகப் பிரிவுகளை முன்வைத்தது.

இம்மூன்று பிரிவுகளையும் ஒரு சமஷ்டி அமைப்பின்கீழ் இயங்கச்செய்யவேண்டுமென்பதில் அச்சங்கம் அக்கறை கொண்டிருந்தது.

இத்தகைய சமஷ்டி அமைப்பு முறையை 1930-ம் ஆண்டு சோல்பரி ஆணைக்குழுமுன்பாக கண்டியத் தேசியச் சங்கம்முன் வைத்தது. அந்த ஆண்டிலேயே இந்திய மாநிலங்கள் குறித்த Covernment of India Act சட்டமும் இந்தியாவில் கொண்டுவரப்பட்டது.

அன்று இத்தகைய நிர்வாக முறைக்கு இலங்கைத் தமிழ் அரசியல் பிரமுகர்கள் ஆதரவளிக்கவில்லை. இதற்கு கண்டியத் தேசியசங்கத்துடன் அன்று நம்மவர்கள் கொண்டிருந்த சில கருத்து வேறுபாடுகள் காரணமாக இருந்தன.

### நியாயக்குரல்

ஆனல் கண்டியத்சேசிய சங்கம் குறிப்பிட்டதன் அடிப்படையில் வடக்கு-கிழக்கு ஒரு தனித்தமிழ் பிரதேசம். அதற்கு சுயாட்சி உரிமை வேண்டுமென சமஷ்டி அடிப்படையில் நாம் நியாயமாகக் குரலெழுப்பியபோது, அத்தகைய சுயாட்சிஅமைப்பு தனிநாட்டுக்குச் சமமானதென இன்றைய அரசியலாளர்கள் எம்மைப் புறக்கணித்துள்ளார்கள்.

கூடவே எமது இந்த வடக்கு-கிழக்கு தமிழ்ப் பகுதியின் தனித்துவத்தை நாம் பேண முடியாதவாறு அத்துமீறல் குடியேற்றம் உட்பட பல்வேறுபட்ட பலாத்கார நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது" என்ருர்.

வடக்கு-கிழக்கு தமிழ்பேசும் மக்கள் குடிசனத்தொகை பற்றிக் கூறுவீர்களா? என்றேன்.

### முதல் குடிசன மதிப்பீடு

நீலன்: "1827-ம் ஆண்டிலேயே இலங்கையில் முதல் தடவையாக குடிசனமதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

வடக்கு-கிழக்கை ஒரு தனித் தமிழ்ப்பிரதேசமாக எடுத்து அம்மதிப்பீட்டை நோக்கிஞல் மட்டக்களப்பில் (அம்பாறை, திருக்கோயில் ஆகியவற்றை உள்ளடக்கி) ஒரு சிங்களக் குடிமகனும் குடியிருக்கவில்லை.

திருகோணமலைப் பகுதியில் சுமார் 250 பேர் வரையிலேயே சிங்கள குடிமக்கள் காணப்பட்டனர். எனவே இத்தொகையின் அடிப்படையில் அன்று கிழக்கில் [திருமலை மட்டக்களப்பு இணைந்தபகுதி] 250 சிங்களவர்களே இருந்தனர்.

ஆஞல் 1981-ம் ஆண்டு நடத்தப்பட்ட குடிசனமதிப்பீடு பல வியத்தகு தரவுகளை வழங்கியிருந்தது. அம்பாறை மாவட்டத்தில் 41 வீதமும், திருகோணமலையில் 33 வீதமும் சிங்கள இனத்தவர்களின் குடித்தொகை அதிகரித்ததை அத்தரவுகள் புலப்படுத்தின. இத்தரவுகளை சற்று ஆராயும் போது கிழக்கில் 25 சதவீதம் சிங்களக் குடியேற்றங்கள் நிகழ்ந்துள்ளதை அறிய முடிகின்றது. அண்மைக்காலங்களில் நிகழ்ந்த வன்முறைகளின் போது இப்பகுதிகளில் தமிழ் பேசும் மக்களே அதிகளவில் அகதிகளாஞர்கள்.

இவ்வாறு திட்டமிட்ட குடியேற்றங்கள் கிழக்கில் இடம் பெற்றுள்ளபோதிலும் தமிழ் பேசும் மக்களே இங்கு தொடர்ந்தும் பெரும்பான்மையினராக [75 வீதம்) உள்ளனர் என்ருர்.

### கலாசார பின்னணி

காலனித்துவ காலத்தின் போது இடம்பெற்ற கலாசார சீரழிவுகளின் அடிப்படையிலும் டாக்டர் நீலன் விளக்கமளித்தார்.



அவர் குறிப்பிட்டதாவது; "போர்த்துக்கீசர்களின் ஆட்சியின்போது இலங்கையில் பல இந்துக்கோயில்கள் அழிக்கப்பட்டிருந்தன. ஆனல் திருக்கோயில், களவஞ்சிக்குடி, தம்பலகாமம் ஆகியபகுதிகளில் இருந்த சில இந்துக்கோயில்கள் அழிக்கப்படவில்லை. இவற்றைக் கொண்டும் கிழக்கில் தமிழினம் பரந்து விரிவுபட்டிருந்ததைக் கலாசார ரீதியாக அறியமுடியும்" என்ருர்.

### வன்முறைகள்

வடக்கு - கிழக்கில் இடம் பெறும் வன்முறைகள் குறித்து கவலை வெளியிட்ட கலாநிதி நீலன், அண்மையில் பட்டிருப்பு முன்ஞள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. பூ. கணேசலிங்கத்தின் மரணச்சடங்குகளில் கலந்துகொள்ளச் சென்றபோது தாம் கிழக்குப்பகுதியின் பிரஜைகள் குழுவினரைச் சந்தித்ததாகக் கூறிஞர்.

"கைதாகும் இளைஞர்கள் குறித்து பிழையான எண்ணிக்கைகளை வெளியிடுவது, பெண்கள் மானபங்கப்படுத்தப்படுவது, கண்மூடித்தனமாகச் சுட்டுத்தள்ளுவது என்பன போன்ற பல அதிர்ச்சி தரும் தகவல்களை அவர்கள் என்னிடம் வெளியிட்டனர்."

இவற்றைவிட வடக்கே இடம்பெறும் விமானத்தாக்குதல்கள், மற்றும் அப்பாவி மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயல்கள் என்பன மிகுந்த வேதனையளிக்கின்றன" என்ருர்.

### ஒக்ஸ்போர்ட் விவாதம்

டாக்டர் நீலனிடம் அண்மையில் அவர் கலந்து கொண்ட 'ஒக்ஸ்போர்ட்' பல்கலைக்கழக(Oxford University) விவாதம் பற்றிச் சிறிது கூறும்படி கேட்டேன்.

இலங்கை அரசு சார்பில் விவாதிக்க பிரதமர் ஆர். பிரேமதாஸாவின் முன்ஞள் செயலாளர் திரு பிரட்மன் வீரக்கோன், லண்டன் இலங்கைச் சங்கத்தின் தலைவர் திரு டக்கிளஸ் விக்கிரமரட்ண, மற்றும் திரு. மகேஸ்விஜேசிறி என்பவரும் ஏற்பாடாகியிருந்தனர்.

தமிழ்மக்கள் சார்பில் முன்ஞள் நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம், நான் டாக்டர் நீலன் திருச்செல்வம் திரு வில்ஸன் ஆகியோர் சமூகமளித்தோம்.

"சிங்களவர்கள் புத்தபகவானை வழிபடுபவர்கள். பலாத்காரம், வன்முறைகளில் அவர்கள் ஈடுபடுவதில்லை" என்று திரு டக்ளஸ் விக்கிரமரட்ண தெரிவித்தார்.

### புத்தரையும் உடைத்தார்கள்

திரு. மு. சிவசிதம்பரம் பதிலளித்ததாவது: "சிங்கள மக்கள் புத்தரை வழிபடுவதாகவும் வன்முறைகளில் ஈடுபடுவதில்லை எனவும் கூறுகிறீர்கள். ஆனல் தமிழர்கள் தமது நியாயமான உரிமைகளைக் கேட்கும் போது அவர்களின் உடைமைகளை எரிக்கிறீர்கள், அவர்களைக் கொலை செய்கிறீர்கள்.

"1983 ம் ஆண்டு எனது கொழும்பு வீட்டை எரித்ததுடன் அங்கு நான்வைத்திருந்த ஒரு சிறிய புத்தர் சிலையையும் நாசப்படுத்திஞர்கள்" என்று திரு. சிவா குறிப்பிட்டார்.

இந்த விவாதத்தில் நடுநிலையாளராகக் கலந்து சொண்ட பத்திரிகையாளரும், விரிவுரையாளருமான திரு. டேவிட் செல்போர்ண், இலங்கை இனப்பிரச்னை பற்றித் தாம் எழுதிய போது தமக்கும், தமது குடும்பத்தவருக்கும் மெதிராகக் கொலைப்பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டனஎன்று தெரிவித்தார்.

திரு. வில்சன்இந்த விவாதத்தில் பேசியபோது, "திருகோணமலைத்துறைமுகம் இலங்கைத் தமிழர்களிடம் போய் விடக்கூடாது என்பதற்காக இந்தியாவக்கு எதிரான வெளிநாடுகளான பிரிட்டிஷ், அமெரிக்கா, பாகிஸ்தான், சீஞ என்பன இலங்கை அரசுக்கு ஆதரவளித்து வருகின்றன" என்ருர்.

### லலித் தவிர்ப்பு

இந்த 'ஒக்ஸ்போர்ட்' விவாதத்தில் தமிழ்ப்பார்வையாளர்களே அதிகளவில் (சுமார் 600 பேர்) ஆர்வத்துடன் கலந்து கொண்டதாக டாக்டர் திருச்செல்வம் குறிப்பிட்டார். பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பார்வையளர்கள் குறைவாகவே இருந்தாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த விவாதத்தில் அரசதரப்பினர் பித்தலாட்டமாகவும், கேலிக்கிடமான முறையிலும் கருத்து வெளியிட்டனர். இலங்கை தேசியபந்தோபஸ்த்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி இந்த விவாதத்தில் கலந்து கொள்வதாக ஏற்பாடாயிருந்தது. ஆயினும் இறுதி நேரத்தில் அவர் இதில்கலந்து கொள்வதைத் தவிர்த்துக்கொண்டார்.' என்று கூறி டாக்டர் நீலன் தமது பேட்டியை முடித்துக் கொண்டார்.


# LANKA CEMENT LIMITED
KANKESANTHURAI.

நீண்டகால ஒப்பந்த அடிப்படையில் சுண்ணும்புக்கல்
காங்கேசன்துறையில் உள்ள எமது கற்குழியில் உடைத்து எடுப்பதற்கானதும்
அவற்றை 2 கி. மீ தூரத்தில் உள்ள எமது கல் நொருக்கி
இயந்திரத்திற்கு எடுத்துச் செல்வதற்குமான

## அழைப்பு:

நாள் ஒன்றுக்கு 3000 தொன் சுண்ணும்புக் கற்களை காங்கேசன்துறையில் உள்ள எமது கற்குழியில் இருந்து பாரிய இயந்திரங்கள் மூலம் உடைத்து கனரக வாகனங்களில் ஏற்றி 2 கி. மீ தூரத்திலுள்ள எமது கல்நொருக்கி இயந்திரத்திற்கு காலை 7-00 மணிக்கும் மாலை 5-00 மணிக்கும் இடையில் இறக்குதல்.

கற்களை உடைப்பதற்கும் அவற்றை அள்ளி கனரக வாகனங்களில் ஏற்றுவதற்குமான பாரிய வாகனங்களை வேலைக்கு அமர்த்தக்கூடிய கைதேர்ந்த ஸ்தாபனங்கள் அல்லது ஒப்பந்தகாரர்கள் மேற்படி விடயமாக நீண்டகால ஒப்பந்தத்தை செய்வதற்கு வேண்டிய தொழில்நுட்ப மற்றும் தகவல்களைப் பெறுவதற்கு எமது தொழிற்சாலை முகாமையாளரை அவரது காரியாலயத்திலோ அல்லது பொதுமுகாமையாளரை 251, தர்மபால மாவத்தை, கொழும்பு 7ல் உள்ள லங்கா சிமென்ற் லிமிட்டெட் காரியாலயத்திலோ காரியாலய நேரத்தில் சந்திக்கும்படி அன்புடன் வேண்டிக் கொள்ளுகிறோம்.

பொதுமுகாமையாளர்,

## லங்கா சிமெந்து லிமிட்டெட்

காங்கேசன்துறை.

(A 360)



## Computer Programming and Data Processing Course

(BASIC LANGUAGE)
6 MONTHS

Week-end classes by qualified and experienced panel of lectures.

Commencement:- 27th April, 1986 at 10-00 a. m.

Fees:- Rs: 1500/- (தவணைமுறையிலும் செலுத்தலாம்.)

60 மணித்தியாலங்களுக்குக் குறையாத Practicals.

Ideal for those who seek employment abroad.

குறிப்பு:- வகுப்புகள் பாதுகாப்பான இடத்தில் நடைபெறும்.
அச்சடித்த பாடக்குறிப்புகள் தமிழிலும் வழங்கப்படும்.

## CANTABIA INSTITUTE
(Pioneers in Computer Education)
21, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(A353) தொலைபேசி: 24201.

## பரதம்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து சிவன் சக்தி போன்ற நடனநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

நாட்டிய நிகழ்ச்சியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவிகளுக்கு திருமதி எஸ். சிவலிங்கராஜா பரிசில்களை வழங்கினார், (பி)

## கிழக்கில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

குழுத்தலைவர் திரு. சாம் தம்பி முத்து இதுகுறித்து தகவல் தருகையில் தினமும் சராசரி இரண்டு அல்லது மூன்றுபெண்களாவது வந்து தமது உறவினர் காணாமல்போனது பற்றி அறிவிக்காமல் இல்லை என்றார்.

[மிகுதி நாளை]

## வரதட்சணை...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

எழுபத்தைந்து ரூபா கொடுத்து பத்திரம் யாராவது திருடிக்கொண்டு போய்விடப் போகிறார்கள் என்று எச்சரித்து அனுப்பினார்களாம்.

அஸாமில் நான் நுழைந்த போது கிளர்ச்சி தீவிரமாய் இருந்த நேரம் தேசியக் கொடியை காங்கிரஸ் கொடியாய் நினைத்துக்கொண்டு என்னைச் சில இடங்களில் கல்லால் அடித்தனர். நாகாலாந்து, மிஸோராம், அருணாசலப் பிரதேசம், மேகாலயா இங்கெல்லாம் வரதட்சணைக் கொடுமையை இல்லை என்று அங்கே போனபோதுதான் அறிந்து கொண்டேன் மனதுக்கு சந்தோஷமாய் இருந்தது.

பீகாரில் வரதட்சணைக் கொடுமையில் உச்சநிலை நீடிக்கிறது. அங்கு ஓர் இளைஞன் தன் வீட்டிற்கு அழைத்துப் போனான். சாப்பிட உட்கார்ந்ததும் என்னை அவன் அம்மாவிற்கு அறிமுகம் செய்தான் திடீரெனப் பரிமாறுவதை நிறுத்திவிட்டு அவர் என் மகனுக்கு கல்யாணம் நிச்சயமாகி விட்டது, ரூபா 40 ஆயிரம் டௌரி. நீ இங்கிருந்தால் அவன் மனதை மாற்றி, எங்களுக்கு வரவிருக்கிறதை தடுத்து விடுவாய், உடனே போய்விடு என்று துரத்திவிட்டார். இந்த இழிநிலைகண்டு இடிந்து போய் விட்டேன்.

சில பீகார் கிராமங்களில் பெண்குழந்தை பிறந்தஉடனே உப்பை அள்ளிவாயில்கொட்டி கொடூரமான முறையில்கொலை செய்கிற பழக்கம்கூட, வழக்கத்தில் இருப்பதாய்த்தெரிந்து கொண்டபோது மனம் துடியாய்த் துடித்ததா.

ஆந்திரப் பிரதேசத்தில் தான் மிக அதிகமானதொகை டௌரியாய்த் தரப்படுகிறது ஒரு புள்ளி விபரப்படி இந்தியாவில் இரண்டு மணிநேரத்துக்கு ஒருவரதட்சணைக்கொலை நடக்கிறது, இதில் 72 சதவீதம் வடக்கே! என்கிறார் ஷெட்டி.

ஆதராம்: கல்கி.

தொகுப்பு: க. கனகராசா


எம்பயர் திரையில்
10-30, 2-30, 6-30, 9-15
மோகன்—சத்தியராஜ்
அன்பின் முகவரி

2வது வாரம்
19ம் திகதி மட்டும்
LIDO Jaffna
10-30, 2-30, 4-30, 6-30
THE STORY OF THE DOLLS
Colour
(Strictly for Adults)

வெலிங்டன்
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன்
அம்பிகா சுவுண்டமணி
நடித்த
நான் பாடும் பாடல்
(கலர்)


## விருந்து எதற்கு?

போட்டார்கள் புதிரொன்று
புரியவில்லை அவர் நோக்கம்:
விருந்தோ பெரு விருந்தாம்
விதிக்குப் பலியாகும்
இக்காலகட்டத்தில்!
கால கட்டம் இதுவெனறால்
கல்யாணம் நடக்காதா?
குருதி வடிவதனல்
குங்குமங்கள்
ஜொலிக்காதா?
பூச்சூடிப் பொட்டு வைத்து
புதுபுடவை தான்கட்டி
பூவையர் நாம் களித்திடவா
போடுகிறோம் பெருவிருந்து?

நாமோ—

பாடித்திரிந்த நாட்கள்
படித்த திருநாட்கள்
பழைய உறவுகளை
பழைய நினைவுகளை
கூடிக் கதைத்திட வும்
குலைந்தபின் நினைந்திடவும்
போடுகின்றோம்
பெருவிருந்து
பொல்லாப்பு இதிலென்ன?
நாட்டுக்கு நாமென்றும்
நயவஞ்சகமில்லை
பெற்ற ஒரே புதல்வனுக்கு
பொட்டிட்டு முத்தமிட்டு
போருக்கு அனுப்பிவைத்த
பொற்கொடியார்
பரம்பரை நாம்
விருந்து படைக்கின்றோம்
வீம்பென்று எண்ணாதீர்
மருந்தேயாயினும்
விருந்தே உண்ணுதல்
எங்கள் மரபலவா?

நாம்—
களியாட்டம் போடவில்லை
இது
துயரோட்டம்
துடைப்பதற்கு!

-சுதா

[* கடந்த ஞாயிறு வாரமலரில் இடம்பெற்ற விருந்தோ பெருவிருந்து என்ற கவிதைக்கு ஒரு பதில்.]


கடைசிநேர வரிவிளம்பரம்

விற்பனைக்கு

காரைநகர் களபூமி பொன்னாவளையில் 8½, பரப்புக் காணியில் கிணற்றுடன் சிறிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: அருட்செல்வம் நடராசா, 26/2, சேர் பொன் இராமநாதன் லேன், திருநெல்வேலி. (C- 1266)

Pioneer Two in One டெக்செட், National வீடியோ டெக் 450, Sanyo T. V 18'' குளிர்சாதனப்பெட்டி Singer, Dressing Table, அடைவுகடைக்குத் தேவையான Iron Safe, Counter மேசை (முதிரை 9' நீளம, மற்றும் றெடிமேட் ஆடைகள், Hi-Fi-National Radio விற்பனைக்குண்டு. S. I. L. வீடியோ கிளப், No 3, நவீன சந்தை மேல்மாடி, திருநெல்வேலி. (C- 1248)

தவறிவிட்டது

இல. 450180210V. புவனேஸ்வரி ஐங்கரநாதன் 19, பண்டாரக்குளவீதி, நல்லூர் என்ற முகவரியுடைய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தோர் அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி என்ற முகவரியில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். (C- 1267)


## "ஆங்கிலம் கற்ற ஆய்வாளர்களும் போற்றிய பண்டிதமணி"

### பேராசிரியர் வேலுப்பிள்ளை அஞ்சலியுரை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத் தமிழ்த் துறையினதும் பேராதனைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்த் துறையினதும் சார்பில் தாம் உரையாற்றுவதாக குறிப்பிட்டு பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை தமதுரையில் நாவலர்மரபுமறைந்துவிட்டது அது பெருமளவு உண்மை. பண்டிதமணி பாரம்பரியக் கல்விமரபில் நேரடியாகவந்தவர். மேலைத்தேசக்கல்வியை பெற்றவர்கள் கூட பண்டிதமணியின் சிந்தனைகளை மதித்துப் போற்றுகிறார்கள் அவரது இலக்கியநடை விழுமிய நடை. அவரதுநடையைப்பின் பற்றிச் சுருக்கிஎழுதவேண்டும் என்றார்.


நேற்று முன்தினம் திருநெல்வேலியில் நடைபெற்ற பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களது அஞ்சலிக் கூட்டத்தில் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. க. சி. குலரத்தினம் பேசுகையில் ''60வருடங்களுக்கு முன் 1926ஆம் ஆண்டு மட்டுவிலூரில் சேர். பொன். இராமநாதன் விஜயம்செய்த போது வரவேற்புரை நிகழ்த்தியவர் மகாலிங்கசிவம் பாட்டுப்பாடி வரவேற்றவர் பண்டிதமணிகணபதிப்பிள்ளை ஏறக்குறைய 1600 ஆசிரியர்களை உருவாக்கினார். குரு விசுவாசத்தை சைவப்பாரம்பரியமுறைப்படி உருவாக்க வேண்டும்,

வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தமது உரையில், பேராசிரியர் சின்னத்தம்பியும், பண்டிதமணி கணபதிப்பிள்ளையும் மறைந்தமை தமிழினத்திற்குப் பேரிழப்பு. பண்டிதமணியின் 'தக்ஷகாண்டம்' நூலரங்கேற்றத்தை முன்னின்று யானைமீது ஏற்றிநிகழ்த்தியவர் பேராசிரியர் சின்னத்தம்பி என்றார்.

முன்னாள் கல்விப்பணிப்பாளர் திரு. வி. மாணிக்கவாசகர் தமதுரையில் ஆசிரியருக்கு ஆசிரியர்; அறிஞர்க்கு அறிஞர்; பேராசிரியருக்குப் பேராசிரியர் தமிழ்பரப்பும்இலட்சியத்தைக் கடைப்பிடித்தபெருமகன் என்றார்.


நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
வல்லிபுரம்
கார்த்திகேசு

தோற்றம்: 15-10-1920
மறைவு: 30-01-1986

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து வழிகாட்டியாய்விளங்கிய தங்களின் ஆத்மசாந்திக்கு கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சனை செய்கின்றோம்.

அன்னாரினது 02-02-86 அன்று நடைபெற்ற மரணச் சடங்குகளில் பங்குபற்றியோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும 01-3-86 அன்று நடைபெற்ற அந்தியேட்டிக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் பங்குகொண்ட அனைவருக்கும் எமது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

திருமதி செல்லம்மா
கார்த்திகேசு,
பிள்ளைகள், மருமகள்.
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி. (C 1240)


## அதிகாலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதாக சென்னையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி [ஈ. பி. ஆர் எல் எப்] அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நயினாதீவில் கடற்படையினர் மேற்கொண்ட மிருகத்தனமான செயல்களுக்குப் பதிலடி கொடுக்கும் ஒரு நடவடிக்கையாகிய இத்தாக்குதலைத் தாம் நடத்தியுள்ளதாக ஈ. ம. பு வி முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. [ச]

## பத்திரிகை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இவ்வாறு இலங்கைஅரசாங்கத்தினால் ஒருதலைப்பட்சமாக அறிவிக்கப்பட்ட ஒருவாரகால விமான குண்டு வீச்சு நிறுத்தம் பற்றிக் கருத்துத் தெரிவித்த 'ஈரோஸ்' இயக்கத்தைச் சேர்ந்த திரு வி. பாலகுமார் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இதுபற்றி அவர் விடுத்துள்ள அறிக்கையொன்றில்: 'வெளிநாடுகளின் நிதியுதவி இல்லாமல் இலங்கை இயங்கமுடியாது. இலங்கைக்கு நிதி உதவி அளிக்கும் நாடுகளின் கூட்டம் அண்மையில் நடைபெறவுள்ளது. இந்நிலையில் இந்தியா உட்பட பல உலக நாடுகள், இலங்கையின் மனித உரிமை மீறல்களைக் கண்டிக்கத் தலைப்பட்டுள்ளன.

''ஒரு யுத்தநிறுத்த ஒப்பந்தமானது, பத்திரிகை மாநாடொன்றிலேயோ அல்லது பத்திரிகை அறிக்கையொன்றின் மூலமோ அறிவிக்கப்பட முடியாது. இலங்கை அரசாங்கத்தின் போக்கினை நன்றாக அறிந்துகொண்டுள்ள நாம் இந்த வலையினுள் சிக்கப் போவதில்லை'' என்று கூறியுள்ளார்.

ஈ பி. ஆர். எல் எவ், இயக்கத்தைச் சேர்ந்த திரு. கே லோகநாதன் இந்த அறிவிப்புப்பற்றித் தெரிவிக்கையில், ''உலக நாடுகளிலிருந்தும், பல்வேறு மனித உரிமை ஸ்தாபனங்களிலிருந்தும் எழுந்துள்ள குற்றச்சாட்டுகளைச் சமாளிக்கவே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது'' என்றுகூறியுள்ளார். (ய-செ)

## இந்தநிலையில்...

[1 ம் பக்கத் தொடர்ச்சி]

கையாளருக்கு அளித்த பேட்டியின்போதே மேற்கண்டவாறு கூறினார்.

புவனர்ஸ்அயர்ஸ் நிதியமைச்சர்கள் மாநாட்டில் 25 நாடுகளின் நிதியமைச்சர்களும், உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டார்கள்.

இவ்விடயம் குறித்து நிதி அமைச்சர் திரு. றொனி டிமெல் மேலும் கூறியதாவது;

''இலங்கையைப் பற்றிய வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் கேள்விகளுக்குப் பதிலளித்தோம் எனினும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறும் போது எவ்வாறு இலங்கைக்கு உதவி வழங்குவது என்ற கேள்வியையே ஏகோபித்த குரலில் எல்லா நாடுகளும் எழுப்பின

''அபிவிருத்திக்கு முன்னர் சமாதானநிலை ஏற்படவேண்டும் என்பது அவர்களது உறுதியான கருத்து இருந்தும் எதிர்பார்த்த உதவிகளைப்பெற முடிந்தது.

''எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் வெளிநாடுகளின் மாநாட்டில் இலங்கையின் வடக்கு, கிழக்கு நிலைமைகள் குறித்தும் ஆராயப் படவுள்ளது.'' [ய-பி]

## லண்டன்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

மீறப்படுவதை ஆட்சேபித்து மொன்றீலில் தமிழரல்லாத ஆயிரக்கணக்கான கனேடியப் பிரஜைகள் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றினை நடாத்தியுள்ளனர்.


★ மலேசியா ★ குவைத்
★ சவூதி அரேபியா, ★ சிங்கப்பூர்

ஆகிய இடங்களுக்குப் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். (ஆண்/பெண்)

பாஸ்போட் மற்றும் 5 புகைப்படப் பிரதிகளுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

K. S. பஞ்சரத்தினம்,
நில அளவையாளர்,
நெல்லியடி (சேவிஸ் ஸ்ரேசன் அருகாமை),
கரவெட்டி. (C- 1265)

சவுதி அரேபியாவுக்கு
பிரயாண ஒழுங்கு

சவுதி அரேபியாவில் துறைமுக தொழிலாளர்களாக (HARBOUR CLEANERS) பணியாற்றுவதற்கு முன்வருவோர்க்கு இரண்டு கிழமைக்குள் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். பாஸ்போட், படங்கள் ஆகியவற்றுடன் உடன் நேரில் வரவும்.

முகவரி:
க. மு. வைத்தீஸ்வரன்
கச்சாய் வீதி,
கொடிகாமம்.
(C 1263)

# ஈழநாடு
## வார மலர்
THE EELANADU VARAMALAR


# தடம்புரண்ட யாழ்தேவி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி

நேற்று நண்பகல் 12-10மணியளவில் பரந்தன் ரயில் நிலையத்தின் 'சிக்னல்' போஸ்றுக்கு 300 யார் தூரத்தில் இவ்விபத்து இடம்பெற்றது.

இவ்விபத்துச் சம்பவத்தைத் தொடர்ந்து யாழ்ப்பாணம்-கொழும்பு ரயில்சேவைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் அனுராதபுரம்வரையுமே ரயில் சேவை நடைபெறும் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

விபத்து இடம்பெற்ற இடத்தில், அதாவது யாழ்தேவி ரயில் அவ்விடத்தை அண்மிப்பதற்கு 5 நிமிடத்துக்குச் சற்று முன்னதாகத் தண்டவாளச் சிலிப்பர் கட்டைகளுக்கு நடுவில் 'கண்ணிவெடி' வெடித்தது; இதனுல் சிலிப்பர்க்கட்டைகள் நாலா பக்கமும் தூக்கிவீசப்பட்டிருந்தன; அருகமையிலுள்ள சிறுகடைகள் சேதமடைந்துள்ளன. தண்டவாளமும் பாம்புபோல் வளைந்தும் நெளிந்தும் கிடக்கக் காணப்பட்டது. கண்ணிவெடி வெடித்த இடத்தில் பாரிய கிடங்கு ஏற்பட்டுள்ளது.

பரந்தன் ரயில் நிலையத்தை யாழ்தேவி ரயில் அடைந்ததும் ரயில் பயணத்தைத் தொடர்வதற்குரிய பச்சைக்கலர் 'சமிக்ஞை'(சிக்னல்)காட்டப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து 'கண்ணி வெடி' வெடித்த சம்பவம் தெரியாமல் ரயில் சாரதி ரயிலை ஓட்டிச் சென்றுர். அவ்விடத்தை அண்மித்ததும் சாரதி தமது புத்தி சாதுரியத்தினுல் ரயிலின் வேகத்தைத் தடுதது நிறுத்த முயற்சித்தரர். அவர் எடுத்துக்கொண்ட தீவிர முயற்சியினுலேயே என்ஜினை அடுத்திருந்த பிரயாணிகள் பெட்டி 3 மட்டும் ஒன்றுடன் ஒன்று மோதி ரயில் பாதையைவிட்டு விலகியதுடன் விபத்து அனர்த்மும் மட்டுப்படுத்தப்பட்டது.

இப்பெட்டிகளுக்குள் நெருக்கமாக இருந்தும் நின்றும் வந்திருந்த பிரயாணிகளுள் சிலர் பலியானுர்கள்; பலர் காயமடைந்தனர்.

மற்றும் பெட்டிகளில் இருந்த பிரயாணிகள் அனைவரும் பெட்டிகளை விட்டு இறங்கி, யாழ்ப்பாணம் நோக்கிவந்த தனியார் வாகனங்களில் ஏறிக்கொண்டர்.

பலியானவர்களின் சடலங்களும் காயமடைந்தவர்களும் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்

இதுவரை காயமடைந்தவர்களுள் 16 பேர் மட்டுமே யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தெரிவித்த தகவலின்படி இருசடலங்கள்கிளிநொச்சி ஆஸ்பததிரியில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

பிரயாணிகள் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி ரயில் நிலையத்தை யாழ்தேவி ரயில் வந்தடைந்ததும் ரயில் நிலையத்தில் நின்ற இராணுவத்தினர், ரயில்வே 'காட'மாருடன் சில நிமிடம் உரையாடியதாகவும் பின்னர் ரயில் தனது பயணத்தைத் தொடர்ந்ததென்றும் சொன்ஞர்கள்.

### சன நடமாட்டம் இல்லை

விபத்து நடைபெற்ற இடத்தை ரயில் அடைந்ததும் அப்பகுதியில் சனமாட்டம் எதுவும் இல்லாமல் வெறிச்சோடிக் காணப்பட்டதாகவும் கடைகள் யாவும் மூடப்பட்டிருந்ததாகவும் அவர்கள் தெரிவித்தார்கள்.

ரயில் பாதையில் வெடித்த கண்ணிவெடி, ஏற்கனவே யார்மேலோ சுமத்துவதற்கு திட்டமிடப்பட்ட 'சதிநடவடிக்கையாகும்' என்று பாதிக்கப்பட்ட பிரயாணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் அறிந்துகொண்டதும் யாழ். ரயில் நிலையத்திலுள்ள உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் அவசரஅவசரமாக விபத்து நடைபெற்ற இடத்துக்கு சரக்குரயில்வண்டியொன்றில் நேற்றுமாலை சென்றடைந்தனர்.

---

## குருமார் குடும்பங்கள் வெளியேற்றம்
# பூஜையுமில்லை, தீபமுமில்லை
## வெறிச்சோடிய 'மணிபல்லவம்'!

(வேலணை)

நயினுதீவில் ஏற்பட்ட அண்மைய அநர்த்தங்களின் விளைவாக அங்குள்ள சைவஆலயங்களில் பூசைகளோ அன்றி விளக்கு வைப்பதோ இல்லாமல் ஆலயங்கள் அனைத்தும் மூடப்பட்டுக்கிடக்கின்றன.

இவ் ஆலயங்களில் கடமையாற்றிவந்த குருமார்கள்அனைவரும் தங்களது குடும்பங்களுடன் பாதுகாப்புக்கருதி நயினுதீவை விட்டு வெளியேறிவிட்டனராம். நயினுதீவில் இடம்பெற்ற வன்செயல்களுக்குப் பின் இன்றுவரை சகல ஆலயங்களும் பூசைகள் நடைபெருமல் பூட்டப்பட்ட நிலையிலேயே காட்சியளிக்கின்றன.

பௌத்த மதத்தினராலும், மற்றும் பலராலும் சரித்திரப் பிரசித்திபெற்ற மணிமேகலையில் வரும் மணிபல்வம் என்றெல்லாம் வர்ணிக்கப்பட்ட இந்தத்தீவுதற்பொழுது சுடுகாடுபோலக் காட்சியளித்துக்கொண்டிருக்கின்றது.

இங்கு பத்துக்கு மேற்பட்ட நித்திய மூன்றுகால பூசைநடக்கும் ஆலயங்களும், நித்திய கால பூசை நடக்கும் பலசிறிய ஆலயங்களும் இருக்கின்றன. இவ் ஆலயங்கள் எதிலும் தற்பொழுது பூசைகள் நடைபெறுவதில்லை.

இதே நேரத்தில் நயினுதீவைச் சேர்ந்தவர்கள் அல்லாத எவரேனும் இப்பொழுது நயினுதீவுக்குச்செல்லமுடியாதவாறு ஆயுதப்படையினரால் தடைவிதிக்கப் பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

---

## "ஆதரவு- ஆனுல் பங்குபற்றமாட்டோம்!"

(யாழ்ப்பாணம்)

"இணைப்புக் குழுவில் நாம் அங்கத்தவர்கள் அல்ல. ஆனுல் எமது அனுதாபங்களும் ஆதரவும் எப்பொழுதும் உண்டு" என்று 'இணைப்புக்குழு நடாத்தும் ஊர்வலமும் பொதுக் கூட்டமும்' என்ற பத்திரிகைச் செய்தி தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் அன்னையர் முன்னணி இவ்வாறு தெரிவித்துள்ளது.

அன்னையர் முன்னணியைச் சேர்ந்த திருமதி குணநாயகம் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"இளவாலையில் இன்று ஞாயிறு நடக்கவிருக்கும் ஊர்வலத்தில் அன்னையர் முன்னணி பங்குபற்றவோ, தலைமை வகிக்கவோ வரமாட்டாது. ஆதரவை மட்டுமே தரும்.

"இதுசம்பந்தமாகத் தாய்க் குழுவுடன் சகல கிளைகளும் சேர்ந்து பேசி ஏகமனதாக இம்முடிவை எடுத்துக் கொண்டோம்" (ஐ)

---

## வடக்கு வரும்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

"வடகிழக்கு மகாணங்கள் இணைந்த சுயாட்சி வழங்குப்படுவதை அமைச்சர்களான தேவநாயகமும், இராசதுரையும் விரும்பவில்லை

"கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் ஆலாலசுந்தரம், உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் ஆகியோர் மரணத்தைத் தொடர்ந்து தான் திம்புப் பேச்சுவார்த்தை முறிந்தது இவர்கள் கொலையைத் தொடர்ந்துதான் கூட்டணித் தலைவர்களான சிவசிதம்பரமும் அமிர்தலிங்கமும் பேச்சுவார்த்தைக்கு வர மறுத்துள்ளனர் கிளிநொச்சி வனனி மாவட்டங்களின் கல்வி அபிவிருத்திக்காக உலக வங்கி பல கோடி ரூபாய்களை ஒதுக்கியுள்ளது இப் பகுதியின் நிலைமை சரியில்லாததால் அப் பணத்தை மலைநாட்டின் கல்வி அபிவிருத்திக்குச் செலவிடப்படுகிறது இதையிட்டு நான் கவலைப்படுகின்றேன்.

"மூன்றில் இரண்டுவீத ஆதரவு இருந்தால் தான் வடக்கையும் கிழக்கையும் இணைத்து மாநில சுயாட்சி வழங்க முடியும்" என அமைச்சர் தமது உரையில் மேலும் கூறினுர்.

---

## திரியாயில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தினம் மாலை 5-30 மணிக்கு 60 இராணுவத்தினர் நடந்து வந்தனர். இவர்கள்மீது எமது வீரர்களால் பொது நேக்கு இயந்திரத் துப்பாக்கி,RPG-7 ரைபிள். கிருனேட் என்பவற்றுல் பலத்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவம் பின்வாங்கி ஓடினர் இறந்தவர்களது சடலம் ஹெலிக்கொப்டர்மூலம் எடுத்துச் செல்லப்பட்டது. இச் சம்பவத்தில் 9 இராணுவததினர் பலியாயினர், பலர் படுகாயம் அடைந்தனர்.

தன்னியக்க ஆயுதங்கள் சிலவும், கவசத் தொப்பிகள் பலவும் கைப்பற்றப்பட்டன எலும்புத் துண்டுகள், இரத்தக்கறைகள் பரவலாகக் காணப்பட்டது."

### கண்ணி வெடி

"திருகோணமலையில் உள்ள பாலம் போட்ட ஆறு என்ற இடத்தில் 4 வாகனங்களில் வந்த கடற்படையினர் மீது எமது வீரர்கள்கண்ணிவெடித் தாக்குதல் மேற் கொண்டனர் அதில் இரண்டாவதாக வந்த ஒரு டிரக் முற்றுகச் சேதமடைந்ததுடன் அதில் வந்த இரு கடற்படை அதிகாரிகளும் 4 கடற்படைச் சிப்பாய்களும் ஸ்தலத்திலேயே பலியானுர்கள். பலர் படுகாயமடைந்தனர்.இச் சம்பவம் நேற்று முனதினம் காலை நடை பெற்றது.

### தொண்டமானுறு

"தொண்டமானுற்று இராணுவ முகாமிற்கு மிக அருகில் உள்ள பாலம் எமது வீரர்களால் நேற்று காலை தகர்க்ப்பட்டது. மக்களின் பாவனைக்கு தடை செய்யப்பட்டிருந்த இப்பாலம் முற்றுமுழுதாக இராணுவத்திற்கே பயன்பட்டது. இராணுவ நடமாற்றத்தை குறைக்கும் முகமாக இப்பாலம் தகர்க்கப் பட்டது." (மா)

---

## இரகசிய பேச்சுகள் எதுவுமில்லை! பிரிட்டிஷ் பத்திரிகைச் செய்திகளுக்கு 'அமிர்' மறுப்பு

(சென்னை)

தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும், இலங்கை அரசாங்கத்திற்குமிடையே ரகசியப்பேச்சுவார்த்தைகள் நடந்துவருகின்றன என பிரிட்டிஷ் பத்திரிகைகள் கூறியிருப்பதை தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் மறுத்துள்ளார்.

முன்னதாக சில பிரிட்டிஷ் பத்திரிகைகள் இலங்கையில இனப்பிரச்னை தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழர்விடுதலைக் கூட்டணிக்கும் ரகசிய பேச்சுவார்த்தைகள் இந்திய தூதராலயத்தில உதவியுடன் நடைபெற்றுவருகின்றனவென்று தகவல் தெரிவித்திருந்தன.

இதுபற்றிக்கூறிய திரு அமிர்தலிங்கம், இலங்கை அரசுக்கும், இந்தியத் தூதராலயத்துக்கும் இடையில் நடைபெற்றுவரும் பேச்சுகளில் சில சமயங்களில் கூட்டணிப் பிரமுகரான கலாநிதி நீலன் திருச்செல்வத்திடம் இந்தியத் தூதரகத் தரப்பில் ஆலோசனை கேட்கப்பட்டுள்ளது என்றும் இதைத்தவிர தமது கட்சிக்கும் இலங்கை அரசுக்கும் வேறு எவ்வித பேச்சுவார்த்தைகளும் நடைபெறவில்லை என்றுர், [செ]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பங்குனி மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram. Eelanadu, Telephone, 22389, 24126.

---

### காயமடைந்த...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வவனியா; தம்பிநாயகம், கொழும்புத்துறை; சோமலிங்கம், முருங்கன்; நற்குணராசா கரவெட்டி; எம். சோமசுந்தரம், யாழ்ப்பாணம்; முருகேசு வவனியா; பாலச்சந்திரன், உரும்பராய்; யோகேஸ், சுன்ஞகம்; புஸ்பராசா, கொடிகாமம். [மா]

---

## இன்று இளவாலையில் கண்டனஊர்வலம்

[பண்டத்தரிப்பு]

தேசியஇன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் இணைப்புக்குழுவினுல் ஏற்பாடு செய்யப்பட்ட கண்டன ஊர்வலமும் எதிர்ப்புக் கூட்டமும் இன்று இளவாலையில் நடைபெறவுள்ளது.

---

## மரண அறிவித்தல்

### க. கெங்காதரன்

க. கெங்காதரன் அகால மரணமானுர். அன்னுர் (கினிகத்தேனை முன்னுள் கெங்கா ஸ்ரோஸ் உரிமையாளர்) கந்தசாமி- நாகேஸ்வரியின் சிரேஷ்ட புத்திரனும், கருணுகரன், கிரிதரன், கெங்காதேவி, துவாரகாதேவி, கிரிஜா, கேமலதா, சுதர்சனி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுப்பிரமணியம், கதிர்காமத்தம்பி, செல்வராஜா, வேலாயுதம் ஆகியோரின் மருமகனும், விமலராணியின் பெருமகனும், க. சின்னத்துரை, காலஞ்சென்ற குமாரசாமி சிவகாமிப்பிள்ளை, காலஞ்சென்ற மு. சின்னத்துரை ஆகியோரின் பேரனுமாவார். ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். (C-1270)

### இராமலிங்கம் முத்துச்சாமி

உரும்பிராய் தெற்கு வாசியான திரு. இராமலிங்கம் முத்துச்சாமி [உரிமையாளர், விஜயபாலா ஜுவலர்ஸ், செங்கலடி] அவர்கள் சிவபதமடைந்துவிட்டார். அன்னுர் பொன்னம்மாவின் அன்புக்கணவரும், ஸ்ரீதயக்குமார், ஸ்ரீ பாலச்சந்திரன், விஜயபாலா ஜுவலர்ஸ், செங்கலடி], ஸ்ரீகரன் [ஜேர்மனி] ஸ்ரீபரன்[ஜேர்மனி], திருமதி தயானந்தி, திருமதி சந்திரானந்தி, செல்விகள் கலாநந்தி, கீதாஞ்சலி ஆகியோரின் அன்புத்தகப்பனுரும், திரு T மயில்வாகனம் C O பூநகரி) திரு வி பாக்கியநாதன் [இலங்கை மின்சார சபை, சாவகச்சேரி], சத்தியபாமா ஆகியோரின் அன்புமாமனுரும், திரு. நல்லதம்பி[ஓய்வுபெற்ற ஓவசியர் கண்டி]. திரு சு. பூபாலசிங்கம், பவளம்மா, இராசம்மா மலேசியா] ஆகியோரின் அன்புமைத்துனரும், காலஞ்சென்ற வேலாயுதம் அவர்களின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் சகலனும், ரூபேசன், சூருண்யா, ஆருத்திரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னுரின் ஈமச்சடங்குகள் ஞாயிற்றுக்கிழமை 16-3-86 [இன்று] பி. ப. 1 00 மணிக்கு உரும்பிராய் தெற்கில் அன்னுரின் இல்லத்தில் நடைபெறும். உற்றுர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

C 1257)